இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK SINCE 1909 JAPAN
ELITERADIO Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 03, இதழ்: 248 சோபகிருது வருடம், வைகாசி மாதம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(06.06.2023) ஹிஜ்ரி 1444, துல்கஃதா - 16, 0115 886187 - பக்கங்கள் 10
விலை ரூ.50

BEAT the HEAT
The Reliable Fan
1st June to 30th June 2023
DISCOUNT 15% (On selected models only)
*Conditions apply
KDK SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# ஒளிபரப்புச் சட்டமூலத்தை எதிர்க்கத் தீர்மானம்!

## எதிர்க்கட்சிகள் நேற்று கூட்டு முடிவு



உத்தேச ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலத்தை எதிர்ப்பதற்கு எதிர்க்கட்சிகள் தீர்மானித்துள்ளன.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (05) இடம்பெற்ற கூட்டத்தில் உத்தேச ஒளிபரப்பு அதிகார சபை சட்டமூலத்தை எதிர்ப்பது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் ஊடகங்களின் சுதந்திரத்தை உத்தேச சட்டமூலம் அழித்துவிடும் என இந்த சந்திப்பின் பின்னர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். ஊடகங்களே ஜனநாயகத்தின் நான்காவது தூண் என முழு உலகமும் ஏற்றுக்கொள்கின்றது எனவும் அவர் தெரிவித்துள்ளார். பாராளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் நீதித்துறையிலும் இந்த சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபட நாங்கள் தீர்மானித்துள்ளோம் என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

1997ஆம் ஆண்டின் ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம் அரசியலமைப்புக்கு எதிரானது என உயர்நீதிமன்ற நீதிபதி ஏ.ஆர்.பி.அமரசிங்க தெரிவித்திருந்ததை எதிர்க்கட்சித் தலைவர் நினைவுகூர்ந்துள்ளார். 02 பக்கம்

## பேக்கரி உற்பத்தியில் விலைக்குறைப்பில்லை

### உற்பத்தியாளர்கள் சங்கம்



சமையல் எரிவாயுவின் விலை குறைக்கப்பட்டாலும் பேக்கரி உற்பத்திகளின் விலையில் மாற்றம் ஏற்படுத்த முடியாது என அகில இலங்கை பேக்கரி உற்பத்தி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள பேக்கரிகளில் 25 சதவீதமானோரே சமையல் எரிவாயு மூலம் பேக்கரி உற்பத்திகளை மேற்கொள்கின்றனர். 02 பக்கம்

## கோட்டா முறைமை விரைவில் நீக்கப்படும்

### எரிபொருள் வரிசையே வராதென்கிறார் இராஜாங்க அமைச்சர் அனுருத்த



•நா.தினுஷா

எரிபொருள் கூட்டுத்தாபனத்துடன் புதிதாக உடன்படிக்கை செய்துகொண்டுள்ள சீன நிறுவனமான சினோபெக் நிறுவனத்தின் செயற்பாடுகள் அடுத்த மாதம் முதல் இடம்பெறவுள்ளதாகவும் நாடுமுழுவதிலுமுள்ள 150 எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அரசாங்கம் அறிவித்துள்ளது. 02 பக்கம்

## பழமையான கட்டடங்களை நவீனப்படுத்தி முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கத் திட்டம்

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தகவல்



பழங்கால கட்டடங்களின் தொன்மையை பாதுகாக்கும் வகையில் அவற்றை நவீனமயமாக்கவும் முதலீட்டு வாய்ப்புகளை உருவாக்கவும் அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு முதலீட்டாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் ஜோர்ஜியாவின் இலங்கைப் பிரதிநிதி திருமதி நினோ மக்விலாட்சே உள்ளிட்ட ஜோர்ஜிய முதலீட்டாளர்கள் குழுவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்தக் கலந்துரையாடல் நேற்று (05) நகர அபிவிருத்தி... 02 பக்கம்

## புதிய இணைப்பாளரை நியமித்த சம்பந்தன்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் தமது பிரத்தியேக இணைப்பாளராகவும் திருகோணமலை மாவட்டத்தில் தமது கடமைகளை முன்கொண்டு செல்வதற்காகவும் நேற்று (05) தொடக்கம் திருகோணமலை நகராட்சி மன்றத்தின் முன்னாள் நகர பிதா என்.இராசநாயகத்தை நியமித்துள்ளார்.

இதற்கான உத்தியோகபூர்வ கடிதங்களை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானுக்கும் திருகோணமலை மாவட்ட அரச அதிபருக்கும் சம்பந்தன் ஒப்பம் இட்டு அனுப்பியுள்ளார். 02 பக்கம்

## வங்கிக் கணக்குகளில் பணத்தை திருடிய நபர்

### பெருந்தொகை சிம் அட்டைகளும் மீட்பு

இணையம் ஊடாக பல்வேறு நபர்களின் வங்கிக் கணக்குகளில் இருந்து பணத்தை தனது வங்கிக்கு வரவு வைத்ததாக கூறப்படும் நபர் ஒருவர் கம்பஹா பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



நான்கு கைத்தொலைபேசிகள், மூன்று சிறிய கைத்தொலைபேசிகள் மற்றும் 73 சிம் அட்டைகள் என்பன குறித்த நபரிடமிருந்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. 02 பக்கம்

## ஜெரோம் மனு மீது விசாரணை ஜூலை 28 இல்



பொலிஸார் தன்னைக் கைது செய்வதனைத் தடுப்பதற்கான உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி போதகர் ஜெரோம் பெர்னாண்டோ சமர்ப்பித்த மனு மீதான விசாரணையை ஜூலை 28ஆம் திகதிக்கு ஒத்திவைக்க உயர்நீதிமன்றம் நேற்று தீர்மானித்துள்ளது.

எல்லே குணவன்ச தேரர் உள்ளிட்டோர் போதகர் ஜெரோம் பெர்னாண்டோவுக்கு எதிராக தாக்கல் செய்த மனுவின் அடிப்படையிலேயே இந்த எதிர்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## புதிய பணியேற்கச் சென்றவர் மீது துப்பாக்கிச் சூடு!

### மீகொடையில் சம்பவம்



பத்தரமுல்லை கூட்டுறவு காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் தலைவராக கடமை பொறுப்பேற்பதற்காக பயணித்துக் கொண்டிருந்த தர்ஷன சமரவிக்ரம என்பவர் மீது நேற்று (05) துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

பாதுக்கை, வல்பிட்ட கெமுணு மாவத்தை பிரதேசத்தில் நேற்றுக் காலை 7.35 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. 02 பக்கம்

## ஊடக சுதந்திர இறுதிப் பயணமே ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம்

### ஜீ.எல். கடுந்தொனியில் கருத்து



அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச ஒளிபரப்பு அதிகாரசபை சட்டமூலம், சட்டமாக அமுலானால் அதுவே ஊடக சுதந்திரத்தின் இறுதி பயணமாக இருக்கும். இந்த சட்டமூலத்துக்கமைய அரசாங்கத்தின் சார்பில் செயற்படும் ஊடகங்களே தொடர்ந்து நீடிக்க முடியும். அரசாங்கத்தை விமர்சிக்கும் ஊடகங்கள் இரத்துச் செய்யப்படும். இது நவீன ஜனநாயகத்துக்கு ஏற்பட்டுள்ள பாரிய சவாலாகுமென்று சுதந்திர மக்கள் காங்கிரஸின் சிரேஷ்ட உறுப்பினரும்... 02 பக்கம்

## தோட்டத் தொழிலாளர்களை சந்தித்துப் பேசிய அமெரிக்கத் தூதுவர் ஜூலி



மலையகத்துக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அங்கு மக்களை சந்தித்து அவர்கள் எதிர்கொண்டுள்ள பொருளாதார அரசியல் நெருக்கடிகள் குறித்து கருத்துகளை கேட்டறிந்துள்ளார். 02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



வங்கிக் கணக்குகளில் பணத்தை திருடிய நபர் கைதாம்.. திருட்டுப் போற அளவுக்கு பணம் இருக்கிறதா மக்களிட்ட..?

## பொலிஸாரின் கடமைகளுக்கு இடையூறு செய்தாராம் த.தே.ம.முன்னணியின் மகளிர் அணித் தலைவி கைது!

### 07ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவு



•வட்டுக்கோட்டை நிருபர்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு மகளிர் அணித் தலைவி திருமதி சற்குணதேவி ஜெகதீஸ்வரனை நாளை 07ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த 03ஆம் திகதி வடமராட்சி கிழக்கு தளையடி பொது விளையாட்டரங்கில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கலந்துகொண்ட நிகழ்வு ஒன்றில் தம்மை உறுதிப்படுத்தாத நபர்கள் புகைப்படம் எடுத்தபோது அவர்கள் யார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் அவரது ஆய்வு உத்தியோகத்தர் ஆகியோர் வினவியபோது, அவர்கள் தங்களுடைய அடையாளங்களை நிரூபிக்கத் தவறிய வேளையில், அவரது அடையாளத்தை நிரூபித்துவிட்டு செல்லுமாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. கோரியிருந்தார்.

இதன்போது பொலிஸாரின் கடமைக்கு இடையூறு விளைவித்தார் என்ற குற்றச்சாட்டை முன்வைத்து நேற்று அதிகாலை மருதங்கேணி பொலிஸாரால் சற்குணதேவி கைது செய்யப்பட்டிருந்தார். 02 பக்கம்

### உஷ்



ஜனாதிபதி ரணில் தங்களது கட்சி எம்.பிக்களை பிரித்து தனது பக்கம் எடுக்கவிருப்பதாக சந்தேகப்படும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இது தொடர்பில் அவருடன் நேரடியாகவே பேச்சு நடத்த தீர்மானித்துள்ளது.

அதன்படி, இனிவரும் காலங்களில் அரசியல் ரீதியான பேச்சுகளை நடத்துவதாயின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பிக்களை தனித்தனியே சந்திக்காமல் கட்சி அடிப்படையில் தலைமையை சந்திக்க ரணில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த பேச்சில் எடுத்துக் கூறப்படவுள்ளதாம்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொதுஜன பெரமுன எம்.பிக்களுடன் ஜனாதிபதி கடந்தவாரம் பேச்சு நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தேசிய நீர்வழங்கல் திணைக்களத்தில் தொழில்நுட்ப அதிகாரிகளாக பணியாற்றுவதற்கு 35 பேர் தெரிவு




## நியமனக் கடிதங்கள் வழங்கி வைப்பு



தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் தொழில்நுட்ப அதிகாரிகளாக பணியாற்றுவதற்கு 35 பேர் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்று (05) வழங்கி வைக்கப்பட்டன.

இது தொடர்பான நிகழ்வு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தலைமையில் தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தில் தொழில்நுட்ப அதிகாரிகள் பதவிகளுக்கு வெற்றிடம் நிலவியது.

இதனையடுத்து புதியவர்களை இணைத்துக்கொள்வதற்கு தேசிய மட்டத்தில் பரீட்சை நடத்தப்பட்டது. பரீட்சைமூலம் 35 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நியமனக்கடிதம் வழங்கும் நிகழ்வில் அமைச்சர் உட்பட நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, அமைச்சின் செயலாளர் எஸ்.சமரதிவாகர, தேசிய சமூக நீர்வழங்கல் திணைக்களத்தின் பணிப்பாளர் ஜயதிலக ஹேரத் உள்ளிட்டோரும் பங்கேற்றனர்.

# புசல்லாவை, பெரட்டாசி தோட்ட பஸ் சேவையை உடன் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி போராட்டம்





(எஸ்.கணேசன்)

புசல்லாவை, பெரட்டாசி தோட்டத்துக்கு இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ் சேவையை உடன் ஆரம்பிக்குமாறு வலியுறுத்தி நேற்று (05) மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

புசல்லாவை, கெமுனுபுர சந்தியில் இடம்பெற்ற இப்போராட்டத்தில் தோட்ட மக்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், இளைஞர்கள் எனப் பலரும் பங்கேற்றனர்.

கடந்த மே 27 ஆம் திகதி இ.போ.ச.பஸ் சேவையை ஆரம்பிப்பதற்கான அனுமதியை கம்பளை டிப்போ வழங்கியிருந்தது. பஸ் சேவை ஆரம்ப நிகழ்வை நடத்துவதற்கான ஏற்பாடுகள்கூட இடம்பெற்றிருந்தன.

எனினும், கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் தலையீட்டால் பஸ் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இது அனுமதிக்க முடியாத செயல் என போராட்டத்தில் பங்கேற்றோர் கோஷங்களை எழுப்பினர். அத்துடன், தமது கண்டனங்களையும் வெளியிட்டுள்ளனர்.

பெரட்டாசி வீதி ஊடாக பேரணியாக வந்த மக்கள், கெமுனுபுர சந்தியை வந்தடைந்த பின்னர் போராட்டத்தை முன்னெடுத்தனர். உடனடியாக இ.போ.ச. பஸ் சேவை ஆரம்பிக்கப்பட வேண்டும் என இடித்துரைத்தனர்.

### மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நியமனங்களை வழங்கிய ரணில்

மாவட்ட நீதிபதிகளான ரி.ஜே. பிரபாகரன், பி.கே. பரண கமகே, பாராளுமன்றத்தின் உதவிச் செயலாளர் நாயகம் டிக்கிரி கே. ஜயதிலக மற்றும் சிரேஷ்ட அரச சட்டத்தரணி கே.டி.வை.எம். நயனி நிர்மலா கஸ்தூரிரத்ன ஆகியோருக்கு மேல் நீதிமன்ற நீதிபதிகளுக்கான நியமனக் கடிதங்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று வழங்கினார்.

# மருந்துகளின் விலையை குறைக்க தீர்மானம்



மருந்துப் பொருட்களின் விலையானது 16 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

அதன்படி, தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினால் பதிவுசெய்யப்பட்ட மருந்துகளின் விலை எதிர்வரும் ஜூன் 15 ஆம் திகதி முதல் 16 சதவீதத்தால் குறைக்கப்படவுள்ளது.

இந்த தகவலை சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி உயர்வைக் கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் விரிவான கலந்துரையாடலைத் தொடர்ந்து, விலைக் கட்டுப்பாட்டின் மூலம் கட்டுப்படுத்தப்படும் NMRA மருந்துகளின் விலைகளைக் குறைக்க முடிவு எடுக்கப்பட்டதாகவும் சுகாதார அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

## பழமையான கட்டடங்களை...

மற்றும் வீடமைப்பு அமைச்சில் இடம்பெற்றது.

நகர அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுப்பாட்டிலுள்ள இலங்கையிலுள்ள புராதன கட்டடங்களை முதலீட்டு வாய்ப்புகளுக்காக உரிய முறையில் பயன்படுத்துவது மற்றும் ஜோர்ஜிய முதலீட்டாளர்களுக்கு அந்த முதலீட்டு வாய்ப்புகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

கொழும்பு கபூர் கட்டிடம் மற்றும் கொழும்பு "எய்ட் கிளப்" கட்டடம் என பல இடங்கள் இதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இந்த கட்டடங்கள் வரலாற்று தொன்மைக்கு சேதம் விளைவிக்காத வகையில் நவீனமயப்படுத்தப்படும் என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். நாட்டிலுள்ள பெரும்பாலான பழமையான கட்டடங்கள் முறையான பராமரிப்பு இல்லாததால் பாழடைந்து வருகின்றன. அவற்றை நவீனமயமாக்கி முதலீடுகளுக்கு உரிய முறையில் பயன்படுத்துவதன் மூலம் நாட்டுக்கு வருமானம் ஈட்ட முடியும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி நிலைமைக்கு படிப்படியாக தீர்வுகாணப்பட்டு வருகிறது. எனவே, எதிர்காலத்தில் நாட்டில் முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கு வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு ஆதரவு கிடைக்கும் என நம்புகிறோம்.இந்த வேலைத்திட்டத்தை விரைவில் நடைமுறைப்படுத்துமாறு நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளேன். இத்திட்டத்துக்குப் பயன்படுத்தக்கூடிய வேறு இடங்களைத் தேடி அதற்கேற்ற வேலைத்திட்டத்தை தயாரிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதிலுமுள்ள இவ்வாறான இடங்கள் தொடர்பான தகவல்களை திரட்டப்படுகின்றன. எதிர்காலத்தில் அந்த இடங்களையும் இந்த வேலைத்திட்டத்துக்கு பயன்படுத்த முடியும்.

இந்தக் கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் நிமேஷ் ஹேரத், பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர, பிரதி பணிப்பாளர் நாயகம் (சொத்து) ஈ.ஏ.சி. பிரியசாந்த உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் கலந்துகொண்டனர்.

## பேக்கரி உற்பத்தியில்...

இதன்காரணமாக, பேக்கரி உணவுப் பொருட்களின் விலைகளை குறைக்க நடவடிக்கை எடுக்க முடியாது.

அதேநேரம், கடந்த காலங்களில் சமையல் எரிவாயு விலைத்திருத்தம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பங்களில் விலைத்திருத்தங்களை தமது சங்கம் மேற்கொள்ளவில்லை என அகில இலங்கை பேக்கரி உற்பத்தி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## புதிய இணைப்பாளரை...

சம்பந்தன் உடல் நிலை காரணமாக தற்போது கொழும்பில் தங்கியுள்ளதால் அவரின் கடமைகளை கனடா குகதாசன் மேற்கொண்டிருந்தார். ஆனால் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வேட்பாளர் தெரிவில் சம்பந்தனால் முன்மொழியப்பட்ட வேட்பாளர் பெயர்களை குகதாசன் நிராகரித்திருந்தார்.

குகதாசனுடன் தமது தொடர்புகளை துண்டித்த சம்பந்தன் தமிழரசுக்கட்சி மத்தியகுழுவில் திருகோணமலை உள்ளூராட்சி மன்ற வேட்பாளர் தெரிவு சம்பந்தமாக ஒரு குழுவை அமைத்து ஆராய்ந்து அறிக்கை தருமாறு கோரியிருந்தார்.

இந்நிலையில், புதிய கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை அண்மையில் குகதாசன் தரப்பினர் சந்தித்திருந்தனர்.

இது தொடர்பில் திருகோணமலை மாவட்ட தமிழரசுக் கட்சி பிரமுகர்கள் பலர், இரா.சம்பந்தனிடம் அதிருப்தி தெரிவித்துள்ளனர். தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டை மீறி, தனி அணி செயற்பட முனைவதாக பலரும் விசனம் வெளியிட்டதாக அறிய முடிகிறது.

இதையடுத்து, தற்போது ஜனாதிபதி ரணிலுடன் உரையாடி ,தமது இணைப்பாளர் ஒருவரை நியமிக்க விசேட அனுமதி பெற்ற பின்னர் மேற்படி இராசநாயகம் என்பவரை தமது கடமைகளுக்காக எதிர்வரும் திருகோணமலை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டங்களில் கலந்து கொள்ளவும் உத்தியோக பூர்வமாக நியமித்துள்ளார் சம்பந்தன் .

## வங்கிக் கணக்குகளில்...

கம்பஹா நகரில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று சந்தேக நபரை கைது செய்ததை அடுத்து இந்த தகவல் வெளியாகியுள்ளது.

கம்பஹா, கெஸ்பேவ, ராகம, வெயாங்கொடை, ஹெட்டிப்பொல, பாணந்துறை தெற்கு களுத்துறை, திஹகொடை, கேகாலை, அனுராதபுரம், கிராண்ட்பாஸ், கொடகவெல ஆகிய பொலிஸ் நிலையங்களுக்கு சந்தேக நபருக்கு எதிராக பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கோட்டா முறைமை...

அந்த நிறுவனத்தின் செயற்பாடுகள் ஆரம்பித்ததன் பின்னர், எரிபொருள் பெற்றுக் கொள்வதற்காக தற்போது பயன்பாட்டிலிருக்கும் கோட்டா முறையை (கியூ ஆர் முறை) எதிர்வரும் ஓரிரு மாதங்களில் நீக்குவதற்கான கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக மின்சக்தி மற்றும் வலுசக்தி இராஜாங்க அமைச்சர் இந்திக அனுருத்த தெரிவித்தார்.

கம்பஹா பிரதேசத்தில் இடம்பெற்ற பொசன் தின நிகழ்வொன்றில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஒருபோதும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாது. எரிபொருள் தொகைக்காக கோரிக்கை முன்வைப்பதில் ஏற்பட்ட காலதாமதத்தின் காரணமாகவே கடந்த காலங்களில் எரிபொருள் வரிசையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

எரிபொருள் கொள்வனவு செய்யும்போது, அதிகளவு எரிபொருள் கொள்வனவு செய்யப்படும் என்பதற்காக கோட்டா முறை (கியூவ் ஆர்) பயன்படுத்துகிறது. இந்த கோட்டா முறையும் எரிபொருள் வரிசைகள் உருவாவதற்கு காரணமாக அமைந்துள்ளது.

கோட்டா முறை தற்காலிகமாக அமுல்படுத்தப்பட்டவொன்றாகும். இன்னும் ஓரிரு மாதங்களுக்கே அமுலில் இருக்கும்.

புதிதாக உடன்படிக்கை மேற்கொண்டுள்ள சினோபெக் நிறுவனத்தின் செயற்பாடுகள், 150 எரிபொருள் நிரப்புநிலையங்களை உள்ளடக்கும் வகையில் அடுத்த மாதத்திலிருந்து ஆரம்பமாகவுள்ளன. அதன் பின்னர் அவர்களால் விலைமனு கோரப்படும் எரிபொருள் தொடர்ச்சியாக கிடைக்கும் என்பதால், இந்த கோட்டா முறையை நீக்குவதற்கான கலந்துரையாடல்களை முன்னெடுத்து வருகின்றோம் என்றார்.

## தோட்டத் தொழிலாளர்களை ...

நான் மலையகத்தில் அந்த மக்கள் எதிர் கொள்ளும் பொருளாதார அரசியல் இடையூறுகள், சிறந்த வீடு, கல்வி தங்கள் வாழ்வாதாரத்தை முன்னேற்றுவதற்கான வாய்ப்புகள் குறித்து கேட்டறிவதற்காக அந்த பகுதி குடும்பங்களை சந்தித்தேன் . மகளிர் அமைப்புகளை சேர்ந்த சிறியளவு விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்களை சந்தித்தேன். அவர்கள் தாங்கள் எதிர்கொள்ளும் சவால்கள் உள்நாட்டு பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான பயிற்சிகள் குறித்து தெரிவித்தார்கள் என ஜூலி சங் தனது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

## ஒளிபரப்புச் சட்டமூலத்தை ...

இந்த சட்டமூலத்தை தோற்கடிப்பதற்கு அச்சு இலத்திரனியல் ஊடகங்கள் எங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம் என சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

## புதிய பணியேற்கச்...

இந்த துப்பாக்கிச் சூட்டில் காயங்களுக்குள்ளான 62 வயதுடைய குறித்த நபர் ஹோமாகம ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக மீகொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் அவரின் வீட்டிலிருந்து கெமுனு மாவத்தைக்கு காரை செலுத்துவதற்கு தயாரானபோது, மோட்டார் சைக்களில் வந்த இருவரால் பிஸ்டலை பயன்படுத்தி துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டுள்ளமை பொலிஸார் முன்னெடுத்த ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட நபரின் கையில் காயம் ஏற்பட்டுள்ளதுடன் அவரின் உடல் நிலை சீராக இருப்பதாகவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான நபர் இதற்கு முன்னர் கூட்டுறவு காப்புறுதி கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையில் அங்கத்துவராக கடமையாற்றியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நுகேகொடை பொலிஸ் பிரிவின் விசாரணை அதிகாரிகள் மற்றும் மீகொடை பொலிஸ் குற்றவிசாரணைப் பிரிவின் அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஏற்கனவே இந்த பதவியில் இருந்தவர் இந்த சம்பவத்தின் பின்னணியில் இருந்தாரா என்ற கோணத்திலும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

## ஊடக சுதந்திர...

பாராளுமன்ற உறுப்பினருமான ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

அந்த கட்சியின் தலைமை அலுவலகத்தில் நேற்று (05) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

பலமான ஊடக நிறுவனம் என்பது நவீன ஜனநாயகத்தின் மிகவும் முக்கியமான பண்பாக காணப்படுகின்றது. ஜனநாயகத்தின் நான்காவது தூணாகவே ஊடக சுதந்திரம் கருதப்படுகிறது. அரசியலமைப்பின் 14ஆவது உறுப்புரையில் கருத்துரிமை பற்றி கூறப்பட்டுள்ளது. அதில் கருத்து வெளிப்படுத்தும் சுதந்திரம் தொடர்பில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. ஏனைய சகல மனித உரிமைகளையும் அனுபவிப்பதற்கான முக்கிய நிபந்தனையாக சுயாதீன ஊடகங்கள் கருதப்படுகின்றன. ஆகவே, ஊடக சுதந்திரம் இல்லாமல் ஏனைய உரிமைகளை அனுபவிக்க முடியாது.

அரசாங்கத்தினால் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச சட்ட மூலத்தை, சட்டபூர்வமாக்கினால், அதுவே ஊடக சுதந்திரத்தின் இறுதிப் பயணமாக அமையும் என்பது உறுதியான விடயமாகும். இது சட்டமல்ல, யோசனை மாத்திரமென்பதே அரசாங்கத் தரப்பின் தர்க்கமாக இருக்கிறது. அரசாங்கத்தின் இந்த நிலைப்பாட்டை முழுமையாக மறுக்கிறோம். அது தவறான கருத்தாகும்.

தற்போது சமர்ப்பிக்கப்பட்டுள்ளது உத்தேச சட்டமூலமாகும். 21 பக்கங்களைக் கொண்ட இந்த சட்டமூலத்தில் 34 உறுப்புரைகள் இருக்கின்றன. ஒரு சட்டமாகவே இதனை அரசாங்கம் உருவாக்கியுள்ளது. இதனூடாக இலங்கையின் ஊடக சுதந்திரம் பாதிப்படையும். எமது நாட்டில் மிகவும் பிரபல்யமான ஊடக நிறுவனங்கள், தொலைக்காட்சிகள் இருக்கின்றன. நீண்டகாலமாக இவை மக்களுக்காக சேவையாற்றி வருகின்றன. இந்த ஊடக நிறுவனங்களுக்கு உத்தியோகபூர்வ அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உத்தேச சட்டமூலம் அமுலானால், அது ஊடக நிறுவனங்களின் தன்மை முழுமையாக மாற்றத்தை சந்திக்கும். இது சட்டமாக அமுலாகும் நாளிலிருந்து ஊடகங்களின் நிலைமை முழுமையாக மாற்றத்தை சந்திக்கும். மேலும், சமூக ஊடகங்களில் இது நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும்.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இந்த சட்டமூலம், சட்டமாக அமுல்படுத்தப்பட்டதிலிருந்து ஆறு மாதங்களில், தற்போது ஊடகங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் சகல அனுமதிப் பத்திரங்களும் முழுமையாக இரத்தாகும். அதன் பின்னர், அதுவரையில் அந்த ஊடக நிறுவனங்கள் முன்னெடுத்துவந்த செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுக்க முடியாது. மீறி செயற்பாடுகளை தொடர்ந்தால் அது சட்டவிரோதமான செயற்பாடாகும். சட்டம் அமுலாகி ஆறு மாதங்களில் தற்போதுள்ள சகல ஊடகங்களையும் மூடவேண்டிய நிலை ஏற்படும். ஊடகங்கள் சகலதும் மௌனித்துவிடும்.

அவ்வாறு தொடர்ந்து செயற்படவேண்டுமானால், சட்டம் அமுலான தினத்திலிருந்து மூன்று மாதங்களில் ஊடக நிறுவனங்கள் பதிவு செய்யப்படவேண்டும். மூன்று மாதங்களில் புதிய அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போதிருக்கும் அனுமதிப் பத்திரத்தை பயன்படுத்த முடியாது. அவ்வாறானால், பலதசாப்தங்களாக இந்த ஊடக நிறுவனங்களின் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுப்பதானால் மீண்டும் முதலிலிருந்து ஆரம்பிக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் அந்த நிறுவனங்களை உடனடியாக மூடவேண்டி ஏற்படும். இது ஊடகங்களுக்கான பாரிய சவாலாகும்.

அவ்வாறு அந்த அனுமதிப் பத்திரம் கிடைத்தாலும் அது ஒரு வருட காலத்துக்கே செல்லுபடியாகும். அனுமதிக் கிடைத்து ஒருவருடம் நிறைவடைவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னரே, இன்னுமொரு அனுமதிப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த விடயங்கள் தொடர்பான சகல விடயங்களையும் இந்த உத்தேச சட்ட மூலத்தினால் உருவாக்கப்படவுள்ள ஆணைக்குழுவே இறுதித் தீர்மானத்தை எடுக்கும். ஆணைக்குழு இணங்கினால் பணிகளை தொடரலாம். இல்லாவிட்டால் செயற்பாடுகளை நிறுத்திக்கொள்ள வேண்டும். ஆகவே, அரசாங்கத்துக்கு ஏற்றவாறு செயற்படுவதானால் அனுமதிப் பத்திரம் கிடைக்கும். அவ்வாறு இல்லாமல், அரசாங்கத்தை விமர்சித்து செயற்பட்டால் அத்துடன் அந்த ஊடகங்கள் முழுமையாக மூடப்படும் என்றார்.

## பொலிஸாரின் கடமைகளுக்கு...

இந்நிலையில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தில் அவரை நேற்று முற்படுத்திய வேளை கிளிநொச்சி மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான மருதங்கேணி பொலிஸ் அதிகாரிகள் உட்பட்ட 10 க்கு மேற்பட்ட பொலிஸ் அதிகாரிகள் பிணை வழங்க வேண்டாம் என்று முன்வைத்த விவாதத்தின் அடிப்படையில் நாளை 7ஆம் திகதி வரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.





கொழும்பு, ஒருகொடவத்தை அருள்மிகு ஸ்ரீ மஹா பத்திரகாளியம்மன் ஆலயத்தின் வருஷாபிஷேக அலங்கார உற்சவத்தை முன்னிட்டு பால்குட பவனி கடந்த சனிக்கிழமை காலை பேலியகொடை ஸ்ரீ பூபால விநாயகர் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகியது. பால்குட பவனியில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றிருந்தனர்.

## மன்னாரில் 2,432 பேருக்கு மண்ணெண்ணெய் விநியோகம்

### அரச அதிபர் தெரிவிப்பு

மன்னார் மாவட்டத்தில் 2,432 கடற்றொழிலாளர்களுக்கு நேற்று திங்கட்கிழமை மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கிணங்க சீன அரசாங்கத்தினால் குறித்த மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.

மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளிலும் முதற்கட்டமாக 75 லீற்றர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுவதோடு இரண்டாம் கட்டமாக 75 லீற்றர் வழங்கப்படவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## யாழ். - வேலூர் பல்கலைகளுக்கிடையே புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்து




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்துக்கும் இந்தியாவின் வேலூர் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்துக்குமிடையிலான கல்வி சார் கூட்டுக்கான புரிந்துணர்வு உடன்படிக்கை நேற்று (05) திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட்டது.

பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாணத்துக்கான இந்தியத் துணைத் தூதுவர் சிறி ராகேஷ் நட்ராஜ், யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரக அதிகாரிகளான ஸ்ரீ மனோஜ்குமார், ஸ்ரீ நாகராஜன் ராமசுவாமி மற்றும் பல்கலைக்கழகப் பதிவாளர் வி. காண்டீபன், பொறியியல் பீடாதிபதி ஏந்திரி கே. பிரபாகரன், முன்னாள் பீடாதிபதி பேராசிரியர் ஏ.அற்புதராஜா, குடிசார் பொறியியல் துறைத் தலைவர் கலாநிதி பி.கேதீசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வேலூர் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத்தின் சார்பில் கணினி விஞ்ஞானம் மற்றும் பொறியியல் பாடசாலையின் (School of computer science and Engineering - SCOPE) பீடாதிபதி கலாநிதி கே.ரமேஸ்பாபு, பேராசிரியர் பி. சுவர்ணலதா மற்றும் சர்வதேச உறவுகளுக்கான உதவிப் பணிப்பாளர் கலாநிதி ஜே.என்.வி. ரகுராம் ஆகியோர் நிகழ்நிலை வாயிலாக இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர். வேலூர் தொழில்நுட்பப் பல்கலைக்கழகம் அதன் சர்வதேச உறவுகளுக்கான அலகின் ஊடாக சர்வதேச ரீதியாக நூற்றுக்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களுடன் இத்தகைய கூட்டு ஆய்வு மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்கான ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது.

இலங்கையில் றுஹுணு பல்கலைக்கழகம் வேலூர் தொழில் நுட்ப நிறுவனத்துடன் கூட்டு ஆய்வு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த உடன்படிக்கைக்கமைய இரண்டு தரப்புகளிலிருந்தும் மாணவர்கள் மற்றும் பணியாளர்கள் பரிமாற்றம், கல்வி, ஆய்வு நடவடிக்கைகளில் கூட்டு போன்ற விடயங்கள் குறித்து கவனஞ்செலுத்தப்படவுள்ளது.

## கிறிஸ்தவ தேவாலயம் மீது தாக்குதல்




இளவாலை மாரீசன் கூடலில் உள்ள கிறிஸ்தவ தேவாலயத்தின் மீது நேற்றுமுன்தினமிரவு இனந்தெரியாதோரினால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தினால் சுருபம் வைக்கப்பட்டிருந்த கண்ணாடி மற்றும் சுவர் என்பன சேதமடைந்துள்ளன.

இச்சம்பவம் குறித்து தகவல் பெறுவதற்கு இளவாலை பொலிஸ் நிலையத்துக்கு ஊடகவியலாளர் ஒருவர் தொடர்பு மேற்கொண்டபோதும் சரியான தகவலைப் பெறமுடியாதுபோனதாக அவர் தெரிவித்துள்ளார்.






பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு லிபர்ட்டி பப்லிஷர்ஸ் நிறுவனத்தின் அருண செய்தி இணையத்தளம் ஏற்பாடு செய்த பக்திப்பாடல் மற்றும் தானம் வழங்கும் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை அலுவலக வளாகத்தில் இடம்பெற்றன. இந்நிகழ்வில் நிறுவனப் பணிப்பாளர் மாதவ மடவல, பிரதம நிறைவேற்று அதிகாரி விஜித் சந்திரசேன, அருண பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மஹிந்த இலேபெரும, அருண செய்தி இணையத்தளத்தின் ஆசிரியர் சமன் சமரக்கொடி உட்பட்டோர் கலந்துகொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

சோபகிருது வருடம் வைகாசி மாதம் 23ஆம் நாள்
செவ்வாய்க்கிழமை

**மேஷம்** பெரியோர்களின் கோபத்திற்கு ஆளாகாமல் பார்த்துக்கொள்ளுங்கள். தொழில் வியாபாரத்தில் அக்கறை காட்டுங்கள்.

**ரிஷபம்** வீண் பழிகள் உங்கள் மீது சுமத்தப்படலாம். சற்று கஷ்டப்பட்டு உழைத்தாலேயன்றி பணம் கிடைப்பது அரிது.

**மிதுனம்** பெண்களால் எதிர்பாராத சில செலவுகள்- சிக்கல்கள் ஏற்படலாம். எதற்கும் முந்திக்கொண்டு வாய் வார்த்தைகளை விடாதீர்கள்.

**கடகம்** பண ரீதியிலிருந்து வந்த சிக்கல்களை இன்று சமாளிப்பீர்கள். காதல் விவகாரங்களை சற்றுக் கவனமாகக் கையாளுங்கள்.

**சிம்மம்** நீண்டநாள் பகைவர்கள் மன்னிப்புக்கோரி கரம் சேர்த்துக்கொள்வார்கள். மனதைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்க.

**கன்னி** ஏதாவது வீண் வம்பு வழக்குகளில் மாட்டிக்கொள்ளாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பயணத் தடை உண்டு.

**துலாம்** இன்ப அனுபவங்களால் திளைத் திருப்பீர்கள். யாரையும் நம்புவதற்கு முன்னர் ஒன்றுக்கு நான்கு முறை சிந்திக்கவும்.

**விருச்சிகம்** தேவையான பணம் கையிருப்பில் இருந்தாலும் செலவுகளுக்கு குறையிருக்காது. வீண் கேலிப் பேச்சுகளைத் தவிருங்கள்.

**தனுசு** பிரச்சினை இன்றியே மனதைப் போட்டுக் குழப்பிக் கொள்வீர்கள். அவசிய செலவுகளை நிச்சயம் செய்ய வேண்டிய நாள்.

**மகரம்** ஏதோ ஒரு மனக்குறையோடு உலாவிக்கொண்டிருப்பீர்கள், உங்கள் பொருட்களைப் பத்திரப் படுத்திக் கொள்ளுங்கள்.

**கும்பம்** நண்பர்கள் மூலம் நீங்கள் எதிர்ப் பார்த்த உதவி கிடைக்கும், செலவுகளையும் பயணங்களையும் குறைத்துக் கொள்ளுங்கள்.

**மீனம்** வெளியிடத்தவர்களின் பூரண அன்பும் - அரவணைப்பும் நிறைந்த நாள்.மனைவி மக்களோடு குதூகலித்திருப்பீர்கள்.

**திதி**: திருதியை பி.இ. 12.50 வரை பின் சதுர்த்தி (தேய்)
**நட்சத்திரம்** : பூராடம் பி.ப.11.13 வரை பின் உத்திராடம்
**யோகம்** : அமிர்த சித்த யோகம்
**வார சூலை** : வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்** : மு.ப. 7.50– 8.50 மணி வரை
**ராகுகாலம்** : 2.50 – 4.20 மணி வரை
**எமகண்டம்** : 8.50–10.20 மணி வரை
**குளிகை** : 11.50– 1.20 மணி வரை
**சந்திராஷ்டமம்** : இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்** : அஸ்வினி,மகம்,மூலம் (பிறந்தவர்களுக்கு)
**விஷேட தினம்** : -------

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## உரும்பிராயில் நினைவேந்தல்






தியாகி பொன். சிவகுமாரனின் 49 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை யாழ்ப்பாணம், உரும்பிராயில் உள்ள அவரது நினைவிடத்தில் இடம்பெற்றது.

இதன்போது பொன். சிவகுமாரனது சிலைக்கு சுடரேற்றி மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அஞ்சலி நிகழ்வில் அரசியல் தலைவர்கள், சிவில் சமூகத் தலைவர்கள் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர்.

பொன்.சிவகுமாரன் ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களில் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், உரும்பிராயில் பொலிஸாரின் சுற்றிவளைப்பின் போது, பொலிஸாரிடம் அகப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக நஞ்சருந்தி 1974 ஜூன் 5ஆம் திகதி உயிரை மாய்த்துக்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்ப்பாண பல்கலையில் சிவகுமாரனின் நினைவேந்தல்





தியாகி பொன். சிவகுமாரனது 49 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று நண்பகல் 12 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொன். சிவகுமாரனது உருவப்படத்துக்கு ஈகைச் சுடர் ஏற்றி, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

பொன்.சிவகுமாரன் ஈழ விடுதலைப் போராட்ட வீரர்களுள் முன்னோடியாகத் திகழ்ந்தவர். யாழ்ப்பாணம், உரும்பிராயில் பொலிஸாரின் சுற்றி வளைப்பில் நஞ்சருந்தி 1974 ஜூன் 5ஆம் திகதி மரணமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலக சுற்றாடல் தினத்தையொட்டி கொட்டகலையில் விழிப்புணர்வு






(ஆ.ரமேஸ்)

உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு நேற்று கொட்டகலை நகரில் விழிப்புணர்வுப் பேரணி மற்றும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகம் என்பன இடம்பெற்றன. கொட்டகலை "சிந்தனை பவுண்டேஷன்" தொண்டு நிறுவன ஸ்தாபகர் ரமேஷ் ரிஷிகேசன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சூழல் விழிப்புணர்வு குறித்த வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு கொட்டகலை ரயில் கடவையருகிலிருந்து ஆரம்பமான பேரணி, ரொசிட்டா பிரதேச சபைக் காரியாலயம் வரை சென்றது.

அத்துடன் நகரின் சுகாதாரத்தை மேம்படுத்தல், உள்ளக பிரதேசங்களில் தேக்கி வைக்கப்படும் குப்பைகளை அகற்றல், வீதிகளைச் சுத்தம் செய்தல் போன்ற மூன்று கோரிக்கைகளை பிரதானப்படுத்தி கொட்டக்கலை பிரதேச சபைச் செயலாளர் சரத் விக்கிரமசிங்கவிடம் மாணவர்கள் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதனைத் தொடர்ந்து "மாற்றத்தைப் பிறரிடம் இருந்து எதிர்பார்க்காமல் நம்மிடம் இருந்தே ஆரம்பிப்போம்" எனும் வாசகம் எழுதிய துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழன் THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூன் 06ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை

# கஜேந்திரகுமார் எம்.பி. மீதான தாக்குதலும் அடக்குமுறையும்!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், அச்சுறுத லுக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் அறிக்கை ஒன்று அரசாங்கத்தினால் கோரப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி யுள்ளது.

இச்சம்பவம் தொடர்பான அறிக்கையை விரைவில் வழங்குமாறு யாழ்ப்பாணப் பிரதேசத்திற்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு, பொது பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் பணிப்புரை விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மக்களுடன் இருந்தபோது, சில பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்ட காணொளி சமூக வலைத்தளங்களில் பரவியது. இந்நிலையிலேயே, குறித்த விடயம் தொடர்பில் விசேட அறிக்கையொன்றை கோருவதற்கு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அச்சுறுத்தப்பட்டார் என்று கூறப்பட்டாலும், அவரை துப்பாக்கியால் சுடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகவே ஆரம்பத்தில் வந்த செய்திகள் கூறின. அரசியல் கட்சியொன்றின் தலைவர், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அச்சுறுத்தப்பட்டார், அவரை துப்பாக்கியால் சுட முயற்சி என்ற செய்திகளை சாதாரண ஒரு செய்தியாக கடந்துசெல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலைமையே நாட்டில் இருக்கிறது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியானது வடக்கில் நடக்கும் தமிழருக்கு எதிரான செயற்பாடுகளைக் கண்டித்து பாராளு மன்றத்தில் குரல்கொடுக்கும் அதேசமயம் மக்கள் மத்தியிலும் போராட்டங்களை நடத்தி வருகிறது. அண்மைக்காலமாக தையிட்டி விகாரை விடயத்தில் அவர்கள் நடத்தும் போராட்டம் அரசாங்கத்திற்கு தலைவலியை தந்திருக்கிறது. ஒரு பக்கம் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்கப்போவதாக சொல்லும் ரணில் அரசாங்கம், மறுபக்கம் தமிழர் பகுதிகளில் மத ரீதியாக மேற்கொள்ளும் ஒடுக்குமுறைகள் அம்பலமாவதை எவ்விதத் திலும் விரும்பாது. அதன் காரணமாகவே, அந்த அநீதிகளை வெளிக்கொணரும் மக்கள் பிரதிநிதிகளை அச்சுறுத்த முயல்கிறது அரசு.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரால் தனது சொந்த மாவட்டத்திற்கு இயல்பாக சென்றுவர முடியவில்லை என்றால் சாதாரண மக்களின் நிலைமையை கூறத் தேவையில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களிடமே எகிறிக்குதிக்கும் பாதுகாப்புத்துறையினர், சாதாரண மக்களை எவ்வாறு கையாளுவார்கள் என்பதை விரிவாக கூறத் தேவையில்லை. பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மட்டுமல்ல, அந்தக் கட்சியின் முக்கிய பிரமுகர்களான கஜேந்திரன் பொன்னம்பலம், சட்டத்தரணி சுகாஷ் ஆகியோரும் பாதுகாப்புத்துறையினரின் அச்சுறுத்தலுக்கு ஆளாகி வருகின்றமையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் மீது ஆயுதமுனையில் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்த அச்சுறுத்தலானது, சாதாரண தமிழ் மக்களின் இயல்பு வாழ்வில் இராணுவம் மற்றும் அரச புலனாய்வாளர்களால் எத்தகைய அச்சுறுத்தல்கள் ஏற்படக்கூடும் என்பதை மிகத்தெளிவாகக் காட்டியிருக்கிறது. அதற்கப்பால் இலங்கை அரசியலமைப்பின்படி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்குள்ள சிறப்புரிமைகளை மீறி, பொலிஸ் உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளனர். நாட்டில் தமிழர்கள் 70 வருடங்களுக்கு மேலாக நடத்தும் அரசியல் உரிமை போராட்டத்தின் நியாயத்தை மீளவும் ஒருமுறை உறுதி செய்துள்ளது இந்த சம்பவம் என்பதே உண்மை.

இலங்கையில் நீதியும் நியாயமும் நிலைநாட்டப்பட்டுக்கொண்டி ருப்பதாக நினைக்கும் சர்வதேச சமூகம், இலங்கை அரசு நடத்தும் இந்தக் குறளி வித்தையை புரிந்துகொள்ள வேண்டும். தமிழர்களுக்கு எதிராக இந்தத் தீவில் மேற்கொள்ளப்படும் அடக்குமுறை என்றுமே நிறுத்தப்படமாட்டாது என்ற உள்ளார்த் தத்தையும் சர்வதேச சமூகம் உணரவேண்டும். இப்படியான சம்பவங்கள் அதனையே உணர்த்துகின்றன. இந்த சம்பவம் தொடர்பான விசாரணைகள், அறிக்கைகள் எல்லாம் வெறும் கண்துடைப்பே.

# ஊடக சுதந்திரத்தை ஒடுக்கும் பாதையில் செல்லக்கூடாது

ශ්‍රී ලංකා ජාතික සාම මණ්ඩලය
தேசிய சமாதானப் பேரவை
National Peace Council of Sri Lanka

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தம் (International Covenant on Civil and Political Rights) குடியியல் உரிமைகள், அரசியல் உரிமைகள் தொடர்பிலான உலகின் தரநிலையான வழிகாட்டியாகும். அந்த ஒப்பந்தம் அரசாங்கங்களினால் துஷ்பிரயோகம் செய்யக்கூடிய ஒரு முறையில் இலங்கையின் சட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டது.

நகைச்சுவைப் பேச்சாளர் நதாஷா எதிரிசூரிய அந்த சட்டத்தின் கீழ் கைதாகி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றமை அரசாங்கங்களினால் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கென்று கொண்டுவரப்பட்ட ஒரு சட்டம் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்ற இன்னொரு துரதிர்ஷ்டவசமான உதாரணமாகும்.

வெறுப்புப் பேச்சை தடைசெய்யும் சிவில் உரிமைகள் மற்றும் குடியியல் உரிமைகளுக்கான ஒப்பந்த சட்டத்தின் 3 (1) பிரிவின் ஏற்பாடுகளை நதாஷா மீறியிருப்பதாக குற்றஞ்சாட்டப்படுகிறது. தனது நகைச்சுவை நிகழ்ச்சிகளில் ஒன்றில் அவர் சிறுமியாக இருந்தபோது புத்தபிரானிடம் காணப்பட்ட ஆற்றல்களை உதாரணமாகக் கூறி, தங்களை மேம்படுத்திக்கொள்வதில் சிறுவர்களிடம் மந்தநிலை காணப்படும் இன்றைய சமூக சூழ்நிலையில், வாழ்க்கையுடன் ஆற்றல்களை ஒப்பிட்டார்.

இவ்வுலக வாழ்க்கை தொடர்பான வாக்குவாதங்களுக்கு மதங்களின் ஸ்தாபகர்களையும் போதகர்களையும் பயன்படுத்துவது அந்த போதனைகளைப் பின்பற்றுகின்றவர்களின் மனதை புண்படுத்தி அவமதிப்பதாக இருக்கலாம். ஆனால், இந்த நகைச்சுவைப் பேச்சு கலைவடிவத்தை வெறுப்புப்பேச்சுக்கு ஒப்பானதாக வர்ணிப்பது நியாயமற்றதாகும். ஒரு வாரத்துக்கும் அதிகமாக அந்த பெண் கலைஞரை தடுத்துவைத்திருப்பதும் நியாயமற்றதாகும்.

பாரபட்சம், வன்முறை அல்லது பகைமையை தூண்டுகின்ற வகையில் அமையக்கூடிய வெறுப்புணர்ச்சியை ஆதரித்துப்பேசுவதை சிவில் உரிமைகள் மற்றும் குடியியல் உரிமைகளுக்கான ஒப்பந்தச் சட்டத்தின் 3(1) பிரிவு தடைசெய்கிறது. நதாஷாவின் விவகாரத்தில் அவரது பேச்சு வெறுப்புப்பேச்சாக இருப்பதால் சட்டவிரோதமானது என்று கூறுவதானால் சம்பந்தப்பட்ட குழுவுக்கு எதிராக பாரபட்சம் காட்டுமாறு அல்லது பகைமையை வெளிப்படுத்துமாறு அல்லது வன்முறையில் ஈடுபடுமாறு மற்றவர்களை துண்டிவிடும் நோக்கம் அவருக்கு இருந்தது என்பதை தெளிவாகக் காண்பிக்கவேண்டியது அவசியமாகும் என்ற சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு அமைப்பான சர்வதேச மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியிருக்கிறது. இந்த பிரமாணத்தின் அடிப்படையில் நதாஷாவின் கருத்து வெளிப்பாடு பொருந்தவில்லையானால், அது அதிர்ச்சி தருவதாக, மனதைப் புண் படுத்துவதாக இருந்தாலும் அது அரசினால் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் மன்னிப்புச்சபை குறிப்பிடுகிறது.

கடந்த காலத்தில் வெறுப்புப் பேச்சுகளின் இலக்காக சிறுபான்மை இனத்தவர்களும் மதத்தவர்களும் இருந்த பல சம்பவங்களைக் கூறமுடியும். ஆனால், அவர்களை அல்லது அவர்களின் மதிப்பை பாதுகாப்பதில் அரசாங்கங்கள் அசமந்தமாகவே இருந்துவந்திருக்கின்றன. இத்தகைய இலக்குவைப்புக்கள் அடிக்கடி இடம்பெற்றிருக்கின்றன. குறிப்பாக தேர்தல் காலங்களில் குறுகிய தேசியவாத உணர்வுகளைத் தூண்டிவிடுவதன் மூலமும் மற்றவர்கள் பற்றி பீதியூட்டுவதன் மூலமும் சனத்தொகையின் பிரிவுகளை அணிதிரட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மதக்கோட்பாடுகளின் வழியில் நடப்பதாக தங்களைக் கூறிக்கொள்கின்ற அல்லது தங்களது மதப்பற்றைப் பகிரங்கமாக தவறாமல் காட்டிக்கொள்கின்ற அரசியல் தலைவர்களும் அரசாங்க தலைவர்களும் இலங்கைச் சமூகத்தின் பல மத மற்றும் பன்முகத்தன்மையை கவனத்திற்கொண்டு, நம்பிக்கை, நல்லெண்ணம், நீதி மற்றும் நேர்மை ஆகியவற்றின் அடிப்படையில் நிலைபேறான பன்முக உறவுகளைக் கட்டியெழுப்புவதற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.

வெறுப்புப்பேச்சு புலத்துக்கு வெளியிலான சமூக மற்றும் அரசியல் விமர்சனங்களைச் செய்பவர்களுக்கு எதிராக குடியியல் உரிமைகள் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச ஒப்பந்தச் சட்டத்தை பயன்படுத்துவதை அரசாங்கம் தவிர்க்கவேண்டும் என்று தேசிய சமாதானப் பேரவை அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. வெறுப்புப்பேச்சுக்கு எதிரான இந்தச் சட்டம் அரசாங்கத்தின் அரசியல் எதிரிகளை இலக்குவைப்பதற்கும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்துக்கான வெளியை மூடுவதற்கும் பொதுவில் ஊடக சுதந்திரத்துக்கு எதிராகவும் பயன்படுத்தப்படுத்தப்பட்டு வந்ததையும் பயன்படுத்தப்படுவதையும் நாம் அவதானிக்கிறோம்.

நதாஷாவின் நிகழ்ச்சியை தங்களது இணையத்தளத்தில் ஒளிபரப்பியமைக்காக சமூக ஊடக்தளமான எஸ்.எல்.விலொக்ஸின் உரிமையாளரின் கைது மிகவும் கவலைக்குரிய தோற்றப்பாட்டின் அறிகுறியாகும்.

சுதந்திரமாக கருத்து வெளியிடுவதற்கும் விமர்சன ரீதியாக அபிப்பிராயங்களை கூறுவதற்குமான இடப்பரப்புக்கு எதிரான நடவடிக்கை, ஜனநாயக அரசியல் சமுதாயம் ஒன்றில் அதுவும் குறிப்பாக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மக்களுக்கு பெரும் துன்பங்கள் நேர்ந்ததும் தேர்தல்கள் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரித்துக் காணப்படுகின்றதுமான இலங்கையில் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியது அல்ல.

அந்தப் பாதையில் செல்ல வேண்டாம் என அரசாங்கத்துக்கு வேண்டுகோள் விடுக்கும் தேசிய சமாதானப் பேரவை, கைதுகள் மற்றும் அவற்றுக்கான காரணகாரிய அடிப்படைகள் தொடர்பில் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ்மா அதிபரைக் கேட்டதன் மூலம் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு செய்திருக்கும் தலையீட்டை வரவேற்கிறது.

# சைபர் குண்டு!



## “சைபர் குண்டு போடப்போகிறோம்” இப்படிக்கு அமெரிக்கா..!

“ஆம்! நாங்கள் சைபர் ஆயுதங்களை ஐ.எஸ்.ஐ.எஸ். தீவிரவாதக் கும்பலுக்கு எதிராகப் பயன்படுத்துகிறோம்!” என்று ஒப்புக்கொண்டுள்ளது அமெரிக்கா.

சைபர் போர், சைபர் ஆயுதம் என்றால்..?

இன்னொரு நாட்டின் டிஜிட்டல் கணினிகளையும் தொலைத்தொடர்பு சாதனங்களையும் முடக்கிச் சீரழிப்பதுதான் சைபர் போர்.

இதனால் என்ன ஆகும்?

பகை நாட்டின் முக்கிய செயற்பாடுகள் தடுக்கப்படும். உதாரணமாக அந்நாட்டின் மின்சார உற்பத்தியைத் தடுத்து அவர்களின் மின் ஆலைகளை செயலிழக்கச் செய்ய முடியும்.

இது ஏன் மிக முக்கியமானது?

ஒரு நாட்டின் சக்தியையே முடக்கிவிட முடியும். மிக மிக அதிகமாக தொலைத்தொடர்பையும் கணினி வலையமைப்புகளையும் பயன்படுத்தும் நாட்டில் இந்த தாக்குதல் மோசமான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும்.

இது போலெல்லாம் நடக்குமா?

நடந்திருக்கிறது. மேலும் நடக்கும்!

எங்கே?

உக்ரைனில், கிழக்கு ஐரோப்பிய நாடுகளில், ஈரானில்... வேறு சில நாடுகளிலும் நடந்திருக்கலாம். ஆனால், விடயம் அமுக்கப்பட்டிருக்கும்!

இவற்றையெல்லாம் யார் நடத்துகிறார்கள்..?

பல நாடுகள் இந்த சைபர் போர் தொழில்நுட்பங்களில் முன்னேற்றம் அடைந்திருக்கின்றன. அதிக முன்னேற்றம் கண்டவர்கள் என அமெரிக்கா, சீனா, ரஷ்யா, ஈரான் மற்றும் தென் கொரியாவைச் சொல்லலாம். சைபர் போர் என்பது எங்கெல்லாம் தகவல் தொடர்பு சாதனங்கள் பயன்படுகின்றனவோ அவற்றை டிஜிட்டல் முறையில் தாக்கி செயலிழக்கச் செய்வதாகும். இப்படிச்செய்வது வெறும் கணினிகளை அல்ல. அவற்றால் இயக்கப்படும் எந்திரங்கள், இராணுவச் செயற்பாடுகள், ஏன் ஒரு பெரிய அணைக்கட்டின் நீர் திறக்கும் செயற்பாட்டையே குழப்ப முடியும். யோசித்துப் பாருங்கள், என்ன ஆகும்? அணுசக்தி உலைக்களனைக்கூட இப்போது கணினிகளும் தொலைத்தொடர்பு சாதனங்களும்தானே இயக்குகின்றன. அவற்றை டிஜிட்டல் தாக்குதல் மூலம் சிதைத்தால்... யோசித்துப்பாருங்கள்.

விபரீதம்!

இன்னும் கொஞ்சம் மென்மையான முறையில் எதிரி நாட்டைப்பற்றி பொய்ச்செய்திகள் பரப்புதல், ட்ரோல் என்று சொல்லப்படும் முறையில் திட்டமிட்டு பெரிய அளவில் செய்திகளையோ மறுப்பையோ வலைத்தளங்களிலும் சமூக ஊடகங்களிலும் தொடர்ந்து பரப்பி மக்களின் அபிப்பிராயத்தைக் கலைக்கும் அல்லது திரிக்கும் வகையில் செயல்படுவது கூட சைபர் போர்தான்.

நாம் மேலும் மேலும் தகவல் தொடர்பு சாதனங்களையும் டிஜிட்டல் வழிமுறைகளையும் பயன்படுத்த ஆரம்பிக்க, எல்லா இயக்கங்களும் – தொழிற்சாலைகள், மின்சார உற்பத்தி, வங்கிக்கணக்கு வழக்கு, பணப்பரிவர்த்தனை – வயர்லெஸ்ஸிலும் இணையத்திலும் உலாவப்போக, இந்த சைபர் போரில் அடிபடும் சாத்தியங்கள் அதிகமாகின்றன. இவற்றின் முடிவு பொருளாதாரத்தையே சீர்குலைப்பதாக முடியக்கூடும்.

2010ஆம் ஆண்டு ஈரானின் அணு ஆயுத திட்டத்தை டிஜிட்டலாக தகர்க்க மேற்கொள்ளப்பட்ட அமெரிக்க - இஸ்ரேலிய முயற்சி ஒரு சைபர் போர்தான் என்று ஒப்புக்கொள்கிறார்கள். Stuxnet என்னும் malwareகளை அனுப்பி உலைக்களனை நிகழ்த்தும் மையநீக்கிகளை குளறுபடி செய்தார்கள் என்று பேசப்பட்டது.

சைபர் போர் நடந்தது பற்றி பல செய்திகள் உலாவுகின்றன.

2013இல் பெயர் தெரியாத ஒரு நாடு (இரண்டெழுத்து கொண்டது. முதல் எழுத்து சை, கடைசி எழுத்து னா நடுவில் ஒன்றுமே வராது!) அமெரிக்காவின் எல்லா தனிப்பட்ட கணினிகளின் BIOSஐ தாக்கிய முயற்சி தோற்கடிக்கப்பட்டது என்கிறது அமெரிக்கா.

2014 இல் Sonyயின் தகவல் டேட்டாபேஸ் ஊடுருவப்பட்டது. அதனை செய்தது வட கொரியா என்பதும் கிசு கிசுவே. போன நத்தார் பண்டிகைக்கு முன்பு உக்ரைன் மின்சார உற்பத்தி ஆலைகள் டிஜிட்டல் தாக்குதலுக்கு உள்ளாயின.

கடந்த மார்ச் மாதம் ஈரான், அமெரிக்காவின் நியூயோர்க் அணையின் செயற்பாட்டை தாக்க முயற்சித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டது.

தீவிரவாத இயக்கமான ஐ.எஸ்.ஐ.எஸ். இந்த சைபர் திறமைகளை வளர்த்துக்கொண்டு வருகிறது என்று சொல்லப்பட்டாலும் Stuxnet போன்ற malwareகளைத் தயாரிக்க மிக அதிக செலவாகும். அந்த அளவு செலவுகளை அவர்களால் இப்போதைக்கு செய்யமுடியாது என்பது நொண்டிச் சமாதானமா என்பது எதிர்காலத்தில்தான் நமக்குத் தெரியவரப் போகிறது. சாதாரண Hackersகளால் நாட்டின் முக்கிய பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊடுருவ அவ்வளவு சுலபத்தில் முடியாது.

இந்த சைபர் போர்களில் தாக்குபவர்களை சீக்கிரமாக அடையாளம் காணுதலும் கஷ்டமே. என்னதான் டிஜிட்டல் தடயவியல் முன்னேற்றம் அடைந்தாலும் தாக்குதலின் மூலத்தைக் கண்டுபிடிப்பது ரிஷிமூலம் நதிமூலம் போலத்தாம் என்கிறார்கள் விற்பன்னர்கள்.

மேரிலாண்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர்கள் Richard Forno மற்றும் Anupam Joshi இது பற்றி விளக்கமாக எழுதியிருக்கின்றனர்.

“அமெரிக்காவின் சைபர் போர் தந்திரங்கள் இரகசியமானவை. ஆனாலும், எங்களுக்குக் கிடைத்த செய்திகளை வைத்துக்கொண்டு ஆராய்ந்து இந்த விடயத்தை எழுதியிருக்கிறோம்” என்கிறார்கள் இந்த விற்பன்னர்கள்.

சாதாரண சமிக்ஞையை ‘ஜாம்’ செய்வதில் இருந்து நாட்டையே ஸ்தம்பிக்கச் செய்வது வரை சைபர் போர்முறைகள் பெருகியும் கூரியதாகவும் ஆகி வருகின்றன. ஆக இன்றைய ஜேம்ஸ் பொண்ட்கள் துப்பாக்கியுடன் அழகிய பெண்களுடன் நாடு விட்டு நாடு அலைய வேண்டியதில்லை. குளிருக்கு அடக்கமாக தத்தம் வீட்டிலேயே உட்காந்துகொண்டு சக்தி வாய்ந்த கணினி மற்றும் தொலைத் தொடர்பு சாதனங்கள் மூலம் இன்னொரு நாட்டின் வலையமைப்பில் புகுந்து, ஊடுருவி நாசவேலைகளைச்செய்ய முடியும்.

மூன்றாம் உலக யுத்தம் பானிப்பட்டிலோ வாடர்லூவிலோ நடக்கப்போவதில்லை. வான்வெளியில் கண்ணுக்குத் தெரியாமல் நடக்கும். உங்களை மாதிரி, என்னை மாதிரி ஆட்கள்தான் கூண்டோடு முடங்கி செயலிழந்து திண்டாடப் போகிறோம்.

**நன்றி: இணையம்**

## நக்கல் நமசிவாயம்

*போசொன் தான வரிசைகளில மக்கள் கால் கடுக்க நிற்கிறாங்கள்.. உதுக்கெல்லாம் கோட்டாவுக்குத் தான் நன்றி சொல்லோணும்.. அவர்தானே மக்களை வரிசையில நிற்கப் பழக்கினவர்..!*



## இன்றைய நாளில்...

- 1674 – சிவாஜி மராட்டியப் பேரரசராக முடிசூடினார்.
- 1711 – யாழ்ப்பாணத்தில் இந்து மதச் சடங்குகளுக்கு ஒல்லாந்து அரசினால் தடை விதிக்கப்பட்டது.
- 1761 – சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் வீனஸ் கோளின் நகர்வு பூமியின் பல இடங்களிலும் அவதானிக்கப்பட்டது.
- 1844 – கிறிஸ்தவ இளையோர் அமைப்பு (YMCA) லண்டனில் அமைக்கப்பட்டது.
- 1930 – இலங்கையில் ‘வீரகேசரி’ நாளிதழ் தொடங்கப்பட்டது.
- 1958 – தமிழருக்கு எதிரான இனவன்முறை, 1958: இலங்கையில் மேலும் 5,029 தமிழ் அகதிகள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டனர்.
- 1971 – சோவியத் ஒன்றியத்தின் சோயூஸ்-11 விண்கலம் ஏவப்பட்டது.
- 2004 – இந்தியாவில் தமிழ் மொழி செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

# பிரதேச ரீதியான குறைபாடுகளை ஆராய்ந்து தீர்வு காண்பது அவசியம்

## கோப் குழு வலியுறுத்தல்



பிரதேச ரீதியாக கிராமத் தலைவர்கள் அதாவது விகாராதிபதிகள் உள்ளிட்ட ஏனைய மதத் தலைவர்கள், கிராம சேவகர், ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்கள், பொலிஸார் ஆகியோரை உள்ளடக்கியதாக அமைப்பொன்றை உருவாக்கி பிரதேச ரீதியாகக் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காணவேண்டியது அவசியமாகும் என்று பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு வலியுறுத்தியுள்ளது.

அரசாங்க நிறுவனங்களின் வினைத்திறனற்ற தன்மையை தவிர்ப்பது மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே காணப்படும் இடைவெளியைக் குறைப்பது தொடர்பில் வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய அரசாங்கமொன்று பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு பாராளுமன்ற உறுப்பினர் ஜகத் குமார சுமித்ரா ஆராச்சி தலைமையில் அண்மையில் கூடியது. இதன்போதே மேற்படி விடயம் குறித்து வலியுறுத்தப்பட்டது.

மக்களுடன் நேரடியாகத் தொடர்புபடும் முக்கியமான அரசாங்க நிறுவனங்களின் வகிபாகத்தை மறுசீரமைப்புச் செய்யவும், பலதரப்பட்ட பொதுப் பிரச்சினைகள், தேவைகள் மற்றும் குறைகளை நிவர்த்தி செய்யவும் அவற்றை வழிநடத்தவும் கண்காணிக்கவும் ஒரு திட்டத்தை உருவாக்குவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இதற்காக முன்னாள் ஜனாதிபதி செயலாளர் உதய செனவிரத்ன, முன்னாள் ஆயுர்வேத ஆணையாளர் காமினி காரியவசம், முன்னாள் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் சுனில் எதிரிசிங்க, கைத்தொழில் அபிவிருத்தி சபையின் தலைவர் கலாநிதி சாரங்க அலகப்பெரும, திறன் அபிவிருத்தி அமைச்சின் முன்னாள் செயலாளர் சந்தியா விஜயபண்டார, முன்னாள் அமைச்சின் செயலாளர் சிறிபால வெத்தமுல்ல, முன்னாள் குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் சரத் ரூபசிங்ஹ, முன்னாள் மாவட்ட ஆணையாளர் சுனில் கண்ணங்கர ஆகியோர் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தனர்.

அரசாங்க நிறுவனங்களின் வினைத்திறனற்ற தன்மையை தவிர்ப்பது மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கும் பொது மக்களுக்கும் இடையே காணப்படும் இடைவெளியைக் குறைப்பது தொடர்பில் இங்கு நீண்டநேரம் கலந்துரையாடப்பட்டது. பிரதேச ரீதியாக கிராமத் தலைவர்கள் அதாவது விகாராதிபதிகள் உள்ளிட்ட ஏனைய மதத் தலைவர்கள், கிராம சேவகர், ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்கள், ஏனைய பிரதேச ரீதியாக உள்ள தலைவர்கள், பொலிஸார் ஆகியோரை உள்ளடக்கியதாக அமைப்பொன்றை உருவாக்கி பிரதேச ரீதியாகக் காணப்படும் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு காணவேண்டியது அவசியமாகும் என்றும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

மேலும், 2019ஆம் ஆண்டு அமைச்சரவை அங்கீகாரத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட கிராமப் பாதுகாப்புத் திட்டம் குறித்த கருத்துகள் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டதுடன் தற்பொழுது அது செயலிழந்து விட்டதால், அந்தத் திட்டம் தொடர்பான முன்மொழிவை சமர்ப்பிக்குமாறு நிபுணர் குழுவிடம் குழுவின் தலைவர் கேட்டுக் கொண்டார். மேலும், நிர்வாகம் தொடர்பில் சட்ட விதிகள் காணப்பட்டாலும் அவை உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாமை பிரச்சினைக்குரியது என்றும் இது தொடர்பான நடைமுறையை உரிய முறையில் பேணுவதற்கு கண்காணிப்புகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் நிபுணர்கள் குழு இங்கு சுட்டிக்காட்டியது.

அத்துடன், அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்புடைய பல்வேறு செயல்முறைகளுக்காக வடிவமைக்கப்பட்ட முறையான அமைப்புகளைச் சரியாக நடைமுறைப்படுத்துவதும் புதுப்பிப்பதும் அந்த நிறுவனங்களின் செயற்றிறனை மேம்படுத்துவதற்கும் நிறுவனங்களுக்கும் மக்களுக்கும் இடையிலான நல்லுறவைப் பேணுவதற்கும் முக்கியமானவை என இங்கு தெரிவிக்கப்பட்டது.

நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்களை பரவலாக்குவது மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை சமாளிக்க முடியும் என்றும் பொது நிறுவனங்களுக்கான சரியான தேசிய கொள்கையை ஸ்தாபிப்பதும் நடைமுறையில் அதன் நல்ல செயல்பாடு வெளிப்படையான மற்றும் பொறுப்புக்கூறக்கூடிய அரசாங்கமொன்றுக்கு முக்கியம் என்றும் நிபுணர்கள் குழு மேலும் கூறியது.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான டபிள்யூ.டி.ஜே.செனவிரத்ன, மஹிந்தானந்த அளுத்கமகே, மொஹமட் முஸம்மில், உதயன கிரிந்திகொட, மர்ஜான் பளீல், மயந்த திசாநாயக்க, ராஜிகா விக்கிரமசிங்க ஆகியோர் கலந்துகொண்டனர்.

# ஹெட்டியாக்கந்தையில் கிராம சேவை அலுவலகம் திறப்பு





(பேருவளை நிருபர்)

பேருவளை, ஹெட்டியாக்கந்தை 753ஏ கிராம சேவகர் பிரிவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கிராம சேவை அலுவலகம் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளது.

காதிரியதுன் நபவிய்யா தரீக்காவின் ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய நாயகம் அல் ஆலிமுல் பாழில் அஷ்-ஷெய்க் காமில், அஷ்-ஷெய்க் அஹ்மத் பின் முஹம்மத் ஆலிமின் வழிகாட்டலின் கீழ் இக்கட்டடம் நிர்மாணிக்கப்பட்டு ஹெட்டியாக்கந்தை கிராம சேவகர் அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது.

நபவிய்யா அமைப்பினரதும் பேருவளை நகர சபை முன்னாள் உறுப்பினர் பௌஸூல் அமீர், சமூக சேவையாளர்களான எம்.என்.எம்.நிஹார், முஹம்மத் இஸ்மாயில் ஆகியோரின் ஏற்பாட்டில் திறப்பு விழா நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் பேருவளை பிரதேச செயலாளர் ரஞ்சன் பீ.பெரேரா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு புதிய கட்டடத்தை திறந்து வைத்தார்.

பேருவளை பிரதேச செயலாளர் ரஞ்சன் பீ. பெரேரா உரையாற்றும் போது, பேருவளை புகாரித் தக்கியாவினதும் நபவிய்யா அமைப்பினதும் மக்களின் நலன்கருதி மேற்கொள்ளப்படும் பொதுப் பணிகளை பாராட்டுகிறேன். சங்கைக்குரிய ஆன்மீகத் தலைவர் ஷேகு நாயகத்தின் வழிகாட்டலின் கீழ் இந்த இடத்தில் கிராம சேவை அதிகாரி காரியாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணியானது இப்பிரதேசத்துக்கு மாத்திரமன்றி முழு நாட்டுக்கும் ஓர் முன்மாதிரியான செயற்பாடாகும். இதையிட்டு நன்றி தெரிவிக்கிறேன். கிராம சேவை அலுவலகத்துக்கு பிரதேச மக்கள் பல்வேறு தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள சமுகமளிப்பார்கள். அவர்களுக்கு தமது தேவைகளை இக்காரியாலயத்தினூடாக சிறப்பாக பெற்றுக் கொள்ள வாய்ப்பு கிட்டியுள்ளது. மக்கள் சிரமமின்றி தமது தேவைகளை இக்காரியாலயத்தினூடாக பெற்றுக் கொள்ள வாய்ப்பை வழங்கிய அத்தனை பேருக்கும் பேருவளை பிரதேச செயலாளர் என்ற வகையில் நன்றி தெரிவிக்கின்றேன் என்றார்.

மௌலவி எம்.எஸ்.எம் ஹஸன் (முஸ்தபவி)யின் கிராஅத்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில் முன்னாள் கிராம சேவக அதிகாரி அனோமா, பதில் கிராம சேவக அதிகாரி மஹேஷ் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

இந்நிகழ்வில் விஸ்டம் சர்வதேச பாடசாலையின் உபஅதிபர் அப்துல் காதர், சமூக சேவையாளர் ரியாஸ்தீன் இமாம்தீன், நபவிய்யா ஊடக மையத்தின் பிரதானி ஏ.எச்.எம் முபாரக் (ஆசிரியர்), நபவிய்யா அமைப்பின் முக்கியஸ்தர்கள், நபவிய்யா (நூன்) கல்வி நிலைய முக்கியஸ்தர்கள், பிரதேச செயலக அதிகாரிகள், சமூர்த்தி மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### இயந்திரமொன்றுக்குள் தலைசிக்கி

# இளைஞரொருவர் பரிதாப மரணம்



ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் இயந்திரமொன்றை இளைஞரொருவர் சுத்தம் செய்து கொண்டிருந்தபோது இயந்திரத்தில் தலை சிக்கி உயிரிழந்துள்ளதாக தெரியவருகிறது. இச்சம்பவம் 03ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் குறித்து களுத்துறை வடக்கு பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து குறித்த பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வஸ்கடுவ, பொக்குணாவத்தை பிரதேசத்திலுள்ள ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்து வந்த மித்தெனிய, கட்டுவன, மொரகலகொட, கோபியாவத்தை பகுதியைச் சேர்ந்த சோலங்க ஆராச்சிகே சாமர உதயங்க என்பவரே மேற்படி சம்பவத்தில் பரிதாபகரமாக உயிரிழந்தவராவார்.

இயந்திரத்தை சுத்தம் செய்வதற்காக குறித்த இளைஞன் இயந்திரத்துக்குள் தலையை இலேசாக உள்நுழைத்தபோது மற்றொருவர் தவறான அழுத்தியை இயக்கியதால் இயந்திரத்தின் அச்சிடும் பகுதி கீழே இறங்கியபோது இளைஞனின் தலை சிக்கிக் கொண்டதாகவும் இந்நிலையில் அங்கிருந்த ஊழியர்கள் அவரை மீட்டெடுத்து களுத்துறை போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது இடைவழியில் அவர் உயிரிழந்துள்ளதாகவும் தெரியவருகிறது. இவ்விடயம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர் .

# தமிழர்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை பொன்சிவகுமாரனின் தியாகம் வீண்போகாது

## த.தே.ம.முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ்

(கனகராசா சரவணன்)

சிறிமாவே பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் கல்வி தரப்படுத்தலால் தமிழ் மாணவர்கள் பாதிக்கப்பட்டதை மையமாக வைத்து ஆரம்பமான போராட்டத்தின் முதற் செயற்பாட்டாளராக தியாகி பொன் சிவகுமாரன் விளங்குகின்றார். தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை இப்படிப்பட்ட தியாகங்கள் ஒருபோதும் வீண் போகாது என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் கட்சி காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை (05) இடம்பெற்ற தியாகி பொன் சிவகுமாரனின் 49ஆவது நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் கலந்து கொண்டு அன்னாரது உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவித்து சுடரேற்றி மலர் தூவி இரண்டு நிமிட அஞ்சலி செலுத்தினர். இதனைத் தொடர்ந்து



ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வடகிழக்கில் தமிழ் இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டும் துன்புறுத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் படுகொலை செய்யப்பட்டும் வந்த காலப்பகுதியில் கல்வி தரப்படுத்தலினூடாக தமிழ் மாணவர் சமுதாயத்தை சீரழிப்பதற்காக அப்போதைய ஆட்சியாளர்கள் முயற்சித்தபோதே பொன் சிவகுமாரன் போராட்டத்தை ஆரம்பித்தார்.

தமிழ் மக்கள் பேரவையில் முதற் செயற்பாட்டாளராக செயற்பட்ட இவர் முதல் முதலில் சயனைட் உட்கொண்டு வீரமரணம் அடைந்தார். இவ்விவகாரம் இளைஞர்கள் மத்தியில் தமிழ் உணர்வு புரட்சியை ஏற்படுத்தியுள்ளது.

கல்வியை முன்வைத்து இடம்பெற்ற இப்போராட்டத்தில் சிவகுமாரன் முக்கிய பங்கு வகிக்கிறார். தியாகி சிவகுமாரனை அடிப்படையாகக் கொண்டே தமிழ் மக்களின் இனவிடுதலைக்காக அத்தனை போராட்ட இயக்கங்களும் உருவாகின.

அவர் இறக்கும் போது தமிழ் இனத்துக்காக மீண்டும் பிறப்பு எடுத்து விடுதலையை பெற்றுக் கொடுப்பேன் என்றார். அதன் அடிப்படையில் எத்தனையோ இளைஞர், யுவதிகள் ஆயுதம் ஏந்தி தமிழ் மக்களின் இனப் பிரச்சினையை உலகுக்கு தெரியப்படுத்தியுள்ளபோதும் தமிழ் மக்களுக்கு இன்றுவரை விடுதலை கிடைக்கவில்லை. ஆனால் விதைக்கப்பட்டிருக்கின்ற ஒவ்வொரு மாவீரர்களின் தியாகங்கள் விதையாக இருக்கின்றன. தமிழ் மக்களுக்கு விடுதலை கிடைக்கும் வரை இப்படிப்பட்ட தியாகங்கள் ஒருபோதும் வீண் போகாது. எந்த அரசியல் நோக்கத்துக்காக எமது இனம் போராடியதோ அந்த அரசியல் பணியை தொடர்ந்து செய்வதற்காக பல்வேறு வகையில் போராட்டங்கள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்த வரலாற்றின் அடிப்படையில் அப்பணியை தொடர்ந்தும் முன்கொண்டு செல்வோம் என்றார்.

# வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் பாரம்பரிய இசை நிகழ்ச்சி







இராஜதந்திரத்தின் 75 வருடங்களைக் குறிக்கும் வகையில், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பாரம்பரிய இசை நிகழ்ச்சியை கடந்த வெள்ளிக்கிழமை (02) நடத்தியது.

லயோனல் வென்ட் கலையரங்கில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கையின் சிம்பொனி இசைக்குழுவினரின் இசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

சர்வதேச நல்லிணக்க நிகழ்வானது, இலங்கைக்கு அருகிலுள்ள மற்றும் தொலைதூர நாடுகளுடனான நீண்டகால மற்றும் நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் சிறந்த கிழக்கு மற்றும் மேற்கத்தேய பாரம்பரியங்களின் புகழ்பெற்ற இசையமைப்பாளர்களின் ஓர்கெஸ்ட்ரா இசையின் கலவையை காட்சிப்படுத்தியது.

கொழும்பு ரிட்ஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் நரம்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவில், சிறுவர்களுக்கான நரம்பியல் சத்திரசிகிச்சைக்கான அவசர உபகரணங்களுக்கான நன்கொடைகளை பெற்றுக்கொள்வதற்கான ஒரு பணியுடன் கூடிய கொண்டாட்டமாக இந்த இசை நிகழ்ச்சி அமைந்திருந்தது.

லெராய் அண்டர்சனின் பளபளப்பான பக்லர்ஸ் ஹாலிடே மற்றும் டிரம்பெட் ட்ரையோ, பாவோ யுவான்காயின் தூண்டுதலான மலர்களின் உரையாடல், விஸ்வநாத் லௌஜியின் சின்னமான டான்னோ புடுங்கே, எட்வர்ட் எல்கரின் பிரமாண்டமான ஆடம்பரம் மற்றும் சூழ்நிலை, ஏ.ஆர்.ரஹ்மானின் ஏக்கமான காதல் ரோஜாவே மற்றும் கிழக்கு மற்றும் மேற்கிலிருந்து பல இசைகள் பார்வையாளர்களைக் கவர்ந்தன. ஜோர்ஜஸ் பிஜெட்டின் கார்மென் இலிருந்து ஹபனேரா மூலம் சோப்ரானோ டிமித்ரி குணதிலக்க பார்வையாளர்களை பரவசப்படுத்தினார். கிழக்கத்தேய மற்றும் மேற்கத்தேய இசைக்கருவிகள் கச்சிதமாக ஒன்றிணைந்து, இசையின் உலகளாவிய மொழியின்மூலம் தடைகளைத் தாண்டி நல்லிணக்கத்தை அடைவதற்கான மனிதகுலத்தின் திறனுக்கு இந்தக் கச்சேரி சான்றாக அமைந்தது.

இலங்கையின் சிம்பொனி இசைக்குழு தெற்காசியாவின் பழமையான இசைக்குழுக்களில் ஒன்றாவதுடன், நிகழ்வின் மரியாதை மற்றும் அது ஊக்குவிக்க விரும்பும் மனிதாபிமான நோக்கத்துக்காக, ரிட்ஜ்வே சீமாட்டி வைத்தியசாலை நரம்பியல் சத்திரசிகிச்சைப் பிரிவுக்கு அனைத்து பங்களிப்புகளையும் செலுத்தும் நோக்கில் இந்நிகழ்வு இசைக்குழுவினால் நிகழ்த்தப்பட்டது. இந்தத் திட்டத்துக்காக கொழும்பில் உள்ள இராஜதந்திரத் தூதரகங்கள் மற்றும் நலன் விரும்பிகள் நல்கிய பங்களிப்புகளை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு பாராட்டியுள்ளது.

இந்நிகழ்வில் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி, சுகாதார அமைச்சர் கலாநிதி கெஹெலிய ரம்புக்வெல்ல, தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, வெளிவிவகார செயலாளர் அருணி விஜேவர்தன, இராஜதந்திரத் தூதரகங்கள், ஐக்கிய நாடுகள் சபை மற்றும் கொழும்பில் உள்ள ஏனைய சர்வதேச அமைப்புகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், கொழும்பில் உள்ள தூதரகங்கள், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சிரேஷ்ட அதிகாரிகள், இலங்கையின் சிம்பொனி இசைக்குழுவின் நிர்வாகிகள், ஏனைய விசேட விருந்தினர்கள் மற்றும் கலைஞர்கள் கலந்துகொண்டனர்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.06.04
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

**மஹஜன சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 5135
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 11,935,422.00
ஆங்கில எழுத்து: B
வெற்றி இலக்கங்கள்: 1 3 1 4 0 6

**கொவிசெத**
சீட்டிழுப்பு இலக்கம்: 3377
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 60,072,503.20
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 08 62 67 73

**ஜாதிக சம்பத**
சீட்டிழுப்பு இலக்கம்: 1590
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 11,858,688.00
வெற்றி இலக்கினம்
வெற்றி இலக்கங்கள்: 5 6 8 7 8 5

**தன நிதானய**
சீட்டிழுப்பு இலக்கம்: 1165
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 92,995,058.40
ஆங்கில எழுத்து: S
வெற்றி இலக்கங்கள்: 12 58 71 76

**ராசிசுப பலன்** Handahana
சீட்டிழுப்பு இலக்கம்: 444
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 3,075,195.20
வெற்றி இலக்கினம்: மீனம்
வெற்றி இலக்கங்கள்: 32 39 53 54
விசேட இலக்கினம்: மீனம்

**Mega Power**
சீட்டிழுப்பு இலக்கம்: 1483
அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 326,856,674.00
ஆங்கில எழுத்து: E
சுப்பர் இலக்கம்: 17
வெற்றி இலக்கங்கள்: 16 24 28 47
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# அமரர் சிவசிதம்பரத்தின் 21ஆவது நினைவேந்தல் நெல்லியடியில்






(நெல்லியடி செய்தியாளர்)

அமரர் சிவசிதம்பரத்தின் 21 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் காலை 8.30 மணியளவில் நெல்லியடியில் அமைந்துள்ள அன்னாரது நினைவுச் சதுக்கத்தில் கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியச் செயலாளர் இ.ராகவன் தலைமையில் இடம்பெற்றது.

முதல் நிகழ்வாக கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் உபாலி எஸ்.பொன்னம்பலம் பொது ஈகைச் சுடரை ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது.

அமரரின் திருவுருவச் சிலைக்கு அவருடன் இறுதிவரை உடனிருந்த தங்க முகுந்தன் பொன்னாடை போர்த்த, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினரான எஸ்.சுகிர்தன், முன்னாள் அதிபர் இ. ராகவன், லண்டனைச் சேர்ந்த நடராசா உள்ளிட்டோர் மலர்மாலை அணிவித்ததைத் தொடர்ந்து அனைத்து தரப்பினரும் மலரஞ்சலி செலுத்தினர்.

இறுதியாக அஞ்சலி உரை இடம்பெற்றது.

இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சி பொதுச் செயலருமான எம்.கே சிவாஜிலிங்கம், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன் உட்பட அரசியல் பிரமுகர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு உரையாற்றினார்கள்.

## வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையில் கலந்துரையாடல்



(யாழ். நிருபர்)

வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கத்தினருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமிடையே நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதியில் கலந்துரையாடல் நடைபெற்றது.

அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டதுடன், பாராளுமன்றம் மற்றும் அமைச்சரவையில் குறித்த விடயங்களை எடுத்துரைப்பது தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், தர்மலிங்கம் சித்தார்த்தன், செல்வராஜா கஜேந்திரன் ஆகியோரும் ஏனைய அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் சார்பில் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

வடக்கு செய்திகள் thamilannorth@gmail.com

## வவுனியாவைச் சேர்ந்த முன்னாள் அரசியல் கைதி பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு அழைப்பு

(வவுனியா நிருபர்)





வவுனியாவைச் சேர்ந்த முன்னாள் அரசியல் கைதியொருவரை பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வருமாறு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் (ரி.ஐ.டி) நேற்று (05.06) அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் வசித்துவரும் முன்னாள் அரசியல் கைதியான செல்வநாயகம் ஆனந்தவர்ணன் என்பவரையே இன்று 07 ஆம் திகதி காலை 9 மணிக்கு வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத விசாரணை மற்றும் தடுப்புப் பிரிவுக்கு சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு அனுப்பப்பட்டுள்ள அழைப்பாணையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் பிரிவு 01 இன் மூலம் மேற்கொள்ளப்பட்டுவரும் விசாரணைக்கமைய வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு 2023ஆம் ஆண்டு ஜூன் மாதம் 7 ஆம் திகதி காலை 9 மணிக்கு பயங்கரவாத தடுப்பு மற்றும் விசாரணைப் பிரிவின் வவுனியா கிளைக்கு சமுகமளிக்குமாறு அழைக்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வவுனியாவில் மாடு திருடிய இருவர் மடக்கிப்பிடிப்பு

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் முச்சக்கரவண்டியில் மாடு திருடிய இருவரை பாராளுமன்ற உறுப்பினரும், ஊர் மக்களும் இணைந்து மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்த சம்பவமொன்று நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (04) நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

வவுனியா, சமயபுரம் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த முச்சக்கரவண்டியை மறித்த மக்கள், குறித்த முச்சக்கரவண்டிக்குள் நான்கு கால்களும் கட்டப்பட்ட நிலையில் தலைகீழாக மாட்டை வைத்து அதனை இரப்பர் சீற்றால் சுற்றி கடத்திச் செல்வதை அவதானித்துள்ளனர்.

உடனடியாக பொலிஸாருக்கும், வவுனியா மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கு.திலீபனுக்கும் தகவல் வழங்கப்பட்டதையடுத்து இரு தரப்பினரும் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றிருந்தனர்.

மாட்டை முச்சக்கரவண்டியில் கொண்டுசென்றவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டதுடன், மாட்டை இறைச்சிக்காக வெட்டக் கொடுப்பதற்காகவே கொண்டுசென்றதாக அவர் மக்கள் முன்னிலையில் தெரிவித்திருந்தார்.

தொடர்ந்து இரவு ஒன்றரை மணிவரை வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஊர்மக்களுடன் இணைந்து மாடு களவாடுவதற்கு துணைநின்ற மற்றும் ஒரு நபரை மடக்கிப் பிடித்து பொலிஸில் ஒப்படைத்தார்.

இதனையடுத்து கொண்டுசெல்லப்பட்ட மாடு நெளுக்குளம் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளதுடன், சம்பவம் தொடர்பில் இருவரை கைதுசெய்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.





யாழ்ப்பாணம் சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் பொசன் தினத்தை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை (03) பொதுமக்களுக்கு உணவுப் பொதிகள் மற்றும் இனிப்புப் பண்டங்கள் வழங்கப்பட்டன. (சாவகச்சேரி நிருபர்)

## இங்குருவத்தையா? ‘இங்கு வருவதா?’

(கண்டி நிருபர்)

பொதுவாக பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழியில் பல்வேறு பிழைகள் காணப்படுவதை நாட்டில் காண்கிறோம். ஆனால், அதில் விநோதமான ஒரு பிழையை இங்கு அவதானிக்கலாம்.

இங்குருவத்தை பொலிஸ் நிலையத்தைக் காட்டும் பெயர் பலகையையே மேலே காண்கிறீர்கள். “இங்குருவத்தை” என்பதற்குப் பதிலாக தமிழ் மொழியில் “இங்கு வருவதா” ? என எழுதப்பட்டுள்ளதைக் காணலாம்.




தமிழ் அரசியல்வாதிகள் இதனைத் தங்கள் கவனத்தில் கொள்ளவேண்டுமென சமூக ஆர்வலர்கள் வினயமாகக் கோரிக்கை விடுக்கின்றனர்.

## மஸ்கெலியா பேருந்து தரிப்பிடத்தில் அன்னதானம்

(செ.தி.பெருமாள்)




பொசன் தினத்தை முன்னிட்டு மஸ்கெலியா மத்திய பேருந்து தரிப்பிடத்தில் அன்னதானம் வழங்கபட்டது.

இதற்கான ஏற்பாடுகளை தனியார் பேருந்து உரிமையாளர்கள், தனியார் பேருந்து சாரதிகள், தனியார் பேருந்து நடத்துனர்கள் மேற்கொண்டனர்.

நிகழ்வில் மஸ்கெலியாவில் அமைந்துள்ள சுமனா ராம விகாரையின் பௌத்த குருவான தப்போ வன தேரரின் மத போதனை நிகழ்வு, மஸ்கெலியா சன்முக நாதர் ஆலயக் குருக்கள், கிறிஸ்தவ தேவாலய ஆயர், மஸ்கெலியா ஜும்மா பள்ளிவாசல் மத குரு ஆகியோரின் மத அனுஷ்டானங்கள் இடம்பெற்றன.

மஸ்கெலியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி புஷ்பகுமார மற்றும் ரக்காடு கிராமத்தில் இயங்கும் அதிரடிப் படையினர், நகர வர்த்தகர்கள் தனியார் பேருந்து சாரதிகள், தனியார் பேருந்து நடத்துனர்கள் மற்றும் கிராம மக்கள் என பலர் கலந்துகொண்ட இந்நிகழ்வில் அன்னதானமும் வழங்கிவைக்கப்பட்டது.

## போதைப்பொருளை விழுங்கிய ‘முல்கம்பொல அக்கா’கைது!

(கண்டி நிருபர்)

சொகுசு வாகனத்தில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்ட ‘முல்கம்பொல அக்கா’ என்ற போதைப்பொருள் வர்த்தகப் பெண் பொலிஸ் பிடியிலிருந்து தப்புவதற்கு கைவசமிருந்த போதைப்பொருளை விழுங்கிய நிலையில் சத்திர சிகிச்சைக்காக கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இது பற்றி மேலும் தெரியவருவதாவது:-

‘முல்கம்பொல அக்கா’ என்ற பெண் கண்டி முல்கம்பொல பகுதியில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ளதாக கண்டி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின்படி பொலிஸார் அவரின் இருப்பிடத்தை முற்றுகையிட்டுள்ளனர்.

அப்போது அவருடன் மூவர் இருந்துள்ளனர். 40 வயதுடைய பெண் ஹெரோயின் போதைப் பொருளை விழுங்கிய நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். பின்னர் அவர் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அதேநேரம், கைதான ஒருவரிடம் 10 கிராம் ஹெரோயினும் மற்ற இருவரிடமிருந்து தலா 5.5 கிராம் ஹெரோயின் வீதமும் மொத்தம் 21 கிராம் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபட்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட மேற்படி பெண் ஏற்கனவே கண்டி நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது இடம்பெற்ற மேற்படி பிரதேசத்திற் கருகில் பேராதனை வீதியில் பிரபல ஆண்கள் மற்றும் பெண்கள் பாடசாலைகள் சில உள்ளமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள் thamilanmalayagam@gmail.com

## பித்தளைப் பொருட்கள் உற்பத்தியாளர்களுக்கு மூலப்பொருட்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை

### மத்திய மாகாண ஆளுநர் உறுதி




( கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் பித்தளை கைத்தொழிலில் ஈடுபடுவோர்களது பிரச்சினைகளுக்கு உடன் தீர்வு வழங்க அரசு முன்வந்துள்ளதாக மத்திய மாகண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டியிலுள்ள மத்திய மாகாண ஆளுநர் காரியாலயத்தில் கண்டி மாவட்ட பித்தளை கைத்தொழில் பொருட்கள் உற்பத்தியாளர்களது குழு ஒன்று ஆளுநரைச் சந்தித்துக் கலந்துரையாடியது. அதன்போதே ஆளுநர் இதனைத் தெரிவித்தார். இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டி மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் பிலிமத்தலாவ, உடுநுவர, குண்டசாலை, கலாபுர போன்ற இடங்களில் அதிகளவு பித்தளை கைத்தொழிலாளர்கள் காணப்படுகின்றனர். இவர்களது பாரம்பரிய கைத்தொழில் உற்பத்திகளுக்கு மூலப் பொருட்களின் தட்டுப்பாடு பிரதான காரணமாக உள்ளது. எனவே, எதிர் காலத்தில் போதியளவு மூலப் பொருட்களையும் அதற்குத் தேவையான இதர பொருட்களையும் பெற்றுக்கொடுக்க அரசு முன்வந்துள்ளது.

தற்போது கண்டி மாவட்டத்தில் பிரதான உற்பத்தியாளர்களாக 110 பேர் பதிவாகியுள்ளனர். இவர்களுக்கு மாதமொன்றிற்கு 15 மெற்றிக் தொன் பித்தளை தேவைப்படுவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. எனவே, அவற்றைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் உறுதியளித்தார்.




மாத்தளையிலிருந்து ஒவிலிகந்த மற்றும் பத்திங்கொல்ல பிரதேசங்களுக்கான புதிய பஸ் சேவை ஒன்றை இளைஞர் விவகார விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர் ரோகன திசாநாயக்கா ஆரம்பித்து வைத்தார். இது இந்திய அரசின் கடனுதவித் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பஸ்களில் ஒன்றாகும். (கண்டி நிருபர்)

## நானுஓயா புனித ரீட்டம்மாள் கிறிஸ்தவ ஆலய திருவிழா





(டி சந்ரு)

நானுஓயா பிரதான நகரில் பிரசித்திபெற்ற கிறிஸ்தவ ஆலயங்களில் ஒன்றாகக் கருதப்படும் புனித ரீட்டம்மாள் ஆலயத்தின் வருடாந்த திருவிழா சிறப்பாக இடம்பெற்று வருகிறது

கடந்த ஞாயிற்றுக்கிழமை (28) கொடியேற்றத்துடன் ஆரம்பமான வருடாந்த திருவிழாவில் தொடர்ந்து வார நாட்களில் நவநாள் திருப்பலிகள் சிறப்பாக நடைபெற்றன.

நானுஓயா பிரதான நகரைச் சுற்றி திருச்சொரூப பவனி நடைபெற்றவேளையில் வீதிகளில் பக்தர்கள் அலங்கரித்து திருச்சொரூபத்தை பக்தி பூர்வமாக வரவேற்றனர். ஆலய பங்குத்தந்தை அருட்தந்தை அருட்பணி ரொஷான் டில்ருக்சன் அடிகளாரின் தலைமையில் இந்த திருச்சொரூப பவனி சிறப்பாக நடைபெற்றது.

அத்துடன், அருட்பணி மெனுவல் ஆசீர்வாதம் அடிகளார் தலைமையில் திருவிழா திருப்பலி இடம்பெற்றது.

இதன்போது நற்கருணைப் பிரார்த்தனை மற்றும் ஆசீர்வாத நிகழ்வுகள் நடைபெற்று நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் நீண்ட - நீடித்த - நிலைத்த சமாதானம் வேண்டி சிறப்பு வழிபாடும் மேற்கொள்ளப்பட்டு திருச்சொரூப ஆசீர்வாதமும் வழங்கப்பட்டது.

# ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதி முதலீடு: நிறுவனங்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கவும்

### கோப் குழு மத்திய வங்கிக்கு அறிவுறுத்தல்





ஊழியர் சேமலாப நிதியத்தின் (EPF) நிதி முதலீடு செய்யப்பட்டுள்ள நிறுவனங்கள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறு வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு இலங்கை மத்திய வங்கிக்கு அறிவுறுத்தியுள்ளது.

வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புஹாமி தலைமையில் அண்மையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த 10 வருடங்களில் ஊழியர் சேமலாப நிதியத்தின் சேகரிக்கப்பட்ட நிதி, முதலீடு செய்யப்பட்ட நிதி, இலாபம் மற்றும் நட்டம் மற்றும் EPF நிதி எந்த நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ளன என்றும் எந்த வகையில் முதலீடு செய்யப்பட்டுள்ளன என்பன தொடர்பிலும் இரண்டு வாரங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவின் தலைவர் அறிவுறுத்தல் விடுத்தார். இவை பொதுமக்களின் பணம் என்பதால் பணி ஓய்வுக்குப் பிறகு EPF நிதியை எடுக்க விரும்புவோர் பயனடையும் வகையில் எந்தத் தொந்தரவும் இல்லாத ஒரு சுமுகமான மற்றும் வினைத்திறனான செயல்முறை ஏற்படுத்தப்பட வேண்டும் என்று குழுவின் தலைவர் தெரிவித்தார். அதற்கமைய, ஒரு முறைமை தொடர்பில் தீர்மானிப்பதற்கு சம்பந்தப்பட்ட துறையுடன் தொடர்புடைய நிபுணர்களை அழைப்பதற்கு குழு தீர்மானித்தது.

EPF விண்ணப்பதாரர்களுக்கு அவர்களின் வைப்புகளை மேற்கொள்ளும்போது இடம்பெறும் தாமதம் தொடர்பில் குழு அதிருப்தியை வெளிப்படுத்தியது.

செயல்முறையை சீராகச் செய்வதற்கு மத்திய தரவுத்தளத்தின் அவசியத்தை ஏற்றுக்கொண்ட தொழில் திணைக்களம், ஒருசில அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பிராந்திய தோட்ட நிறுவனங்கள் செலுத்தவேண்டிய EPF தொகையைச் செலுத்தத் தவறியுள்ளன என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

அதற்கமைய, இது தொடர்பில் மேலதிகமாகக் கண்டறிவதற்கு, பொறுப்பான அரச நிறுவனங்கள் மற்றும் பிராந்திய தோட்ட நிறுவனங்களை வெளிநாட்டுத் தொழில்கள் மற்றும் உழைப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு முன்னிலையில் அழைப்பதற்கு அறிவுறுத்தியது.

இதேவேளை, 24 ஆம் திகதி கூடிய குழுவின் கூட்டத்தில் தேசிய தொழில் கற்கைகள் நிறுவகத்தின் 2020 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான டிலான் பெரேரா, பைஸால் காசிம், மிலான் ஜயதிலக்க, சமன்பிரிய ஹேரத் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான கலாநிதி வி. இராதாகிருஷ்ணன், எம். உதயகுமார், கே. சுஜித் சஞ்சய பெரேரா, வடிவேல் சுரேஷ் மற்றும் வேலு குமார் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# LGBTQ சமூகத்தினரின் விழிப்புணர்வுப் பேரணி



(படப்பிடிப்பு சமன் அபேசிறிவர்தன)




இலங்கையின் LGBTQ சமூகத்தினர் Freedom Pride Parade என்ற கருப்பொருளில் நடத்திய விழிப்புணர்வுப் பேரணி நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

தாமரைக் கோபுர சுற்றுவட்டத்திலிருந்து ஆரம்பமான பேரணி, கிரீன் பாத் வழியாக கொள்ளுப்பிட்டி வரை சென்றது.

பல்வேறு வண்ணமயமான ஆடைகளை அணிந்த LGBTQ சமூகத்தினரும் அவர்களின் உரிமைக்காகக் குரல் கொடுப்பவர்களும் இப்பேரணியில் பங்கேற்றதுடன் தமது உரிமைகள் மற்றும் அக்கறைகளை வெளிப்படுத்தும் கலாசார விழாவிலும் கலந்துகொண்டனர். இதன்போது தமது உரிமைகளைக் கோரும் வகையில் பல்வேறு வாசகங்கள் அடங்கிய சுலோக அட்டைகளை அவர்கள் ஏந்தியிருந்ததுடன் அண்மையில் கைது செய்யப்பட்ட நதாஷா எதிரிசூரியவை விடுவிக்குமாறும் கோஷமெழுப்பினர்.

### காதலியை யானையிடம் பறிகொடுத்த

# இளைஞனுக்கு விளக்கமறியல்



தாதிய மாணவியான 23 வயது காதலியை யானையிடம் பறிகொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் காதலன் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வாரியபொல பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட 22 வயதுடைய இளைஞனொருவனே இவ்வாறு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மேற்குறித்த இளைஞனும் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி மருத்துவமனையில் சிகிச்சைபெற்று வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இயற்கை ஆர்வலர்கள் என்று கூறப்படும் குறித்த சோடி, நாடு சுற்றுவதை தங்களது பொழுதுபோக்காகக் கொண்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், தியலும நீர்வீழ்ச்சிக்கருகில் கூடாரமொன்றை அமைத்து தங்கியிருந்தபோது 23 வயதுடைய தாதிய மாணவி யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து மாணவியின் காதலன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோது அவரை எதிர்வரும் 15ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இதேவேளை, கொஸ்லந்த உடதியலும வனவிலங்கு காப்பகத்தில் அனுமதியின்றி பிரவேசித்த குறித்த காதலர்களுக்கு கூடாரம் அமைக்க உதவிய சுற்றுலா வழிகாட்டிகள் எனக் கூறப்படும் இரு இளைஞர்களும் பண்டாரவளை நீதவான் நீதிமன்ற உத்தரவின்பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

# குக்குலாப்பான சந்துருவன் விஹாரைக்கு தமிழ், முஸ்லிம் மாணவர்கள் விஜயம்





(மாவத்தகம நிருபர)

இன நல்லிணக்கத்தையும் சகவாழ்வையும் மேம்படுத்தும் வகையில் பொசன் நோன்மதி சமய கலாசார வழிபாடுகளைக் கண்டறிவதற்காக குக்குலாப்பான சந்துருவன் போதி ஸ்ரீ விஹாரைக்கு தெல்தோட்டைப் பிரதேச தமிழ், முஸ்லிம் மாணவர்கள் விஜயமொன்றை மேற்கொண்டிருந்தனர்.

மனித அபிவிருத்தித் தாபனத்தின் ஏற்பாட்டில் தெல்தோட்டைப் பிரதேசத்திலுள்ள கிரவனாகெட்டிய, கிரேட்வெளி, வெட்டவீர தோட்டப் பிரதேசங்களிலுள்ள தமிழ், முஸ்லிம் மாணவர்களே இதில் கலந்துகொண்டனர்.

இதன்போது மனித அபிவிருத்தி ஸ்தாபனத்தின் இணைப்பதிகாரி லோகோஸ்வரி, குக்குலாப்பான சந்துருவன் போதி ஸ்ரீ விஹாராதிபதி சுதம்ம தேரர் உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர்.

# ஜனாதிபதி செயலகத்தின் தானசாலை



புனித மஹிந்த தேரரின் இலங்கை வருகையை நினைவுகூருமுகமாக ஜனாதிபதி செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட தானசாலை ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க மக்களுக்கு ஐஸ்கிரீம் வழங்கி நிகழ்வை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் ஜனாதிபதியின் தொழிற்சங்கப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரியவும் கலந்துகொண்டார்.



# யொஹானி டி சில்வாவுக்கு டுபாயின் 'கோல்டன் விசா'




இலங்கையின் இளம் பாடகி யொஹானி டி சில்வாவுக்கு டுபாயின் 'கோல்டன் விசா' வழங்கப்பட்டுள்ளது.

கலை, கலாசாரம், பொழுதுபோக்கு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பங்காற்றியவர்களுக்கு டுபாய் வழங்கும் உயரிய விருது 'கோல்டன் விசா' என அழைக்கப்படுகிறது.

ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (05.06.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 187.2054 | 198.6841 |
| கனேடியன் டொலர் | 210.9767 | 223.7226 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 39.4527 | 42.5846 |
| யூரோ | 304.1967 | 321.0999 |
| ஜப்பான் யென் | 2.0304 | 2.1406 |
| சிங்கப்பூர் டொலர் | 210.0367 | 222.3544 |
| ஸ்ரேலிங் பவுன் | 353.8887 | 372.5395 |
| சுவிஸ் பிராங் | 311.7141 | 330.7734 |
| ஐ.அ. டொலர் | 285.6164 | 298.8583 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 775.3186 |
| குவைட் | குவைட் தினார் | 950.1837 |
| ஓமான் | ஓமான் றியால் | 759.2190 |
| கட்டார் | கட்டார் றியால் | 80.1850 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 77.9349 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 79.5868 |

# ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கைக்கான கலீபதுல் குலபாவை சந்தித்தார் இம்தியாஸ்

(பேருவளை நிருபர்)



பாராளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் ஷாதுலிய்யா தரீக்காவின் இலங்கைக்கான புதிய கலீபதுல் குலபாவாக நியமிக்கப்பட்டுள்ள காலி அலிய்யா சட்டக்கல்லூரிப் பணிப்பாளரும் காலி மாவட்ட ஜம்மியதுல் உலமா சபையின் தலைவருமான சங்கைக்குரிய கலீபதுல் குலபா உஸ்தாத் மௌலவி முஹம்மத் ஸுஹுர் ஆலிம் (பாரி) அவர்களை 03ஆம் திகதி மாலை அன்னாரின் காலி நாவின்னையிலுள்ள இல்லத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

புதிய கலீபதுல் குலபாவாக அவர் நியமிக்கப்பட்டமைக்காக தமது வாழ்த்துகளையும் நல்லாசிகளையும் இதன்போது தெரிவித்துக்கொண்டதோடு, ஷாதுலிய்யா தரீக்காவின் வளர்ச்சிக்காகவும் இஸ்லாமிய தஃவா பணிகளைச் சிறப்பாக முன்னெடுக்கவும் துஆப் பிரார்த்தனை புரிவதாக இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் குறிப்பிட்டார்.

ஷாதுலிய்யா தரீக்காவின் உலக ஆன்மீகத் தலைவராகவிருந்த பேரறிஞர் மர்ஹூம் சங்கைக்குரிய ஷேகு ஸஜ்ஜாதா அஷ் ஷெய்க் முஹம்மத் அல் - பாஸி அல் - மக்கி அஷ் ஷாதுலி (ரஹ்) அவர்களினதும் அதற்குப்பின்னர் ஆன்மீகத் தலைவர்களாகவிருந்த சங்கைக்குரிய அஷ் ஷெய்க் மர்ஹூம் அப்துல் காதர் (ரஹ்), சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அப்துல் வஹாப் (ரஹ்), சங்கைக்குரிய அஷ்ஷெய்க் அஜ்வாத் அல் பாஸி (ரஹ்) ஆகியோரின் அளப்பரிய ஆன்மீகப் பணிகளையும் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் இதன்போது ஞாபகமூட்டினார். தனது தந்தையான மர்ஹூம் தேசமான்ய எம்.ஏ. பாக்கிர் மாக்கார் இப்பெரியார்களுடன் மிக நெருங்கிய தொடர்பை கடைசி மூச்சுவரை பேணிவந்தார். இந்த ஆன்மீக பெரியார்கள் தன்னுடனும் தொடர்புகளை வைத்திருந்ததோடு தனது தந்தைக்கு கொடுத்த மரியாதையைப்போல் தன்னுடனும் மிகவும் அன்பாக நடந்துகொண்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

தற்போதைய உலக ஆன்மீகத் தலைவர் சங்கைக்குரிய அஷ் ஷெய்க் மஹ்தி அப்துல்லாஹ் அல் - பாஸி அல் மக்கி அஷ் ஷாதுலி (செய்ஹு ஸஜ்ஜாதா) அவர்களினதும் உன்னதமான ஆன்மீகப் பணி இலங்கை வாழ் மக்களுக்கு கிடைக்க எம்மாலான முழு பங்களிப்பையும் வழங்குவோமென்றும் குறிப்பிட்டார்.



**தேசிய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுடன் இணைந்து நெவிடா பிரிவின் அனுசரணையில் களுத்துறை மற்றும் மத்துகம பிரதேச செயலக பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் அதிகாரிகளான பீ. வனராஜ், எம்.பீ.எவ். நுலாரா ஆகியோரின் ஒருங்கிணைப்பில், தாய்வான் நாட்டிலிருந்து பெறப்பட்ட தலா 30 கிலோகிராம் நிறை கொண்ட அரிசிப் பொதிகள் மத்துகம அன்னாசிகல தமிழ் வித்தியாலய மாணவர்களின் குடும்பங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டன.**

# துறைநீலாவணை கண்ணகி அம்மன் திருச்சடங்கு இன்று





(வெல்லாவெளி செய்தியாளர்)

வரலாற்றுச் சிறப்புமிக்க துறைநீலாவணை கண்ணகி அம்மன் ஆலயத்தின் வைகாசி திருச்சடங்கானது கடந்த செவ்வாய்க்கிழமை(30) திருக்கதவு திறத்தலுடன் ஆரம்பிக்கப்பட்டு இன்று செவ்வாய்க்கிழமை(06) அதிகாலை இடம்பெறும் திருக்குளிர்த்தி பாடுதலுடன் நிறைவுபெறவுள்ளது.

இவ்வருடாந்த திருச்சடங்கில் அம்மன் வீதி உலா வருதல், சிலம்பு அபிஷேகம், அடியார்களின் நேர்த்திக்கடன் நிறைவேற்றல், கன்னிக்கால் வெட்டுதல், கண்ணகிக்கு கலியாணப்பூசை, வட்டுக்குத்துதல் பூசை, திருக்குளிர்த்திச் சடங்குகள் என்பன கண்ணகி அம்மன் ஆலய பிரதம பூசகர் கருணாகரன் யமுனாகரன் தலைமையில் நடைபெற்று வந்த நிலையில், இன்று நிறைவுபெறவுள்ளன.

இவ்உற்சவ காலங்களில் துறைநீலாவணை பொதுமக்களினால் பகல், இரவுவேளைகளில் பூஜைகள் நடைபெற்று கலைநிகழ்வுகள், அன்னதானம், தாகசாந்தி நிகழ்வுகளும் இடம்பெற்றன. கன்னிக்கால் வெட்டும் சடங்கை முன்னிட்டு துறைநீலாவணை யுனைட்டெட் விளையாட்டுக்கழகமும் துறைநீலாவணை நியூ கல்யாணி ஜுவலரி உரிமையாளரும் இணைந்து மாபெரும் தாக சாந்தி நிகழ்வு இடம்பெற்று சடங்கு இன்றுடன் நிறைவுபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு





(கிண்ணியா செய்தியாளர்)

திருகோணமலை, மூதூர் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட சின்னக் குளம் வித்தியாலயத்தில் தெரிவுசெய்யப்பட்ட கல்வி கற்கும் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் சுமார் 75 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை(04) இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்ட செயலக பிரதம கணக்காளர் பரமேஸ்வரனின் கோரிக்கைக்கமைவாக உலக சுகாதார ஸ்தாபனத்தில் கடமையாற்றும் குணாளனின் முயற்சியின் பயனாக கந்தையா தொண்டு நிறுவனத்தினால் இக்கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இதன்போது மாவட்ட செயலக சமூக சேவைத் திணைக்கள இணைப்பாளர் த.பிரணவன், மூதூர் பிரதேச செயலக சமூகசேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் சில்மியா உட்படப் பலர் கலந்துகொண்டனர்.



திருகோணமலை றொட்டரிக் கழகத்தினால் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு சக்கர நாற்காலிகள் அன்பளிப்புச் செய்யப்பட்டன. கழகத் தலைவர் அஜந்திக்கா, செயற்றிட்டத் தலைவர் அபிநயா ரகுராம் ஆகியோரால் வைத்தியசாலைப் பணிப்பாளர் ஜகத் விக்ரமரத்னவிடம் இவை கையளிக்கப்பட்டன. இதன்போது இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு மாகாண பிரதேச முகாமையாளர் கே.பிரபாகரன், இலங்கை வங்கி கிழக்கு மாகாண சந்தைப்படுத்தல் அதிகாரி என். ரகுராம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (அப்துல்சலாம் யாசீம்)



சர்வதேச சுற்றாடல் தினத்தை முன்னிட்டு சுற்றுச்சூழலை சுத்தம் செய்தல் மற்றும் மரம் நடும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல்.தௌபிக் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது உதவிப் பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(திராய்க்கேணி செய்தியாளர்)

## மருத்துவிச்சிகளுக்கான பயிற்சித் திட்டம்



(மாளிகைக்காடு செய்தியாளர்)

பாலின அடிப்படையிலான வன்முறையின் (GBV) அழுத்தமான பிரச்சினையை நிவர்த்தி செய்யும் முயற்சியாக, பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் பொதுச் சுகாதார மருத்துவிச்சிகளுக்கான விரிவான பயிற்சித் திட்டத்தை அண்மையில் ஏற்பாடு செய்திருந்தது.

சமூகத்தில் பாலின அடிப்படையிலான வன்முறையின் வழக்குகளுக்கு திறம்படப் பதிலளிப்பதற்குத் தேவையான அறிவு மற்றும் திறன்களுடன் மருத்துவிச்சிகளைத் தயார்படுத்துவதற்காக இந்தப் பயிற்சித்திட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது.

பிராந்திய மனநலப் பிரிவின் நிபுணரான டாக்டர் எம்.ஜே.நௌஃபல் நிகழ்ச்சியின் வளவாளராகக் கலந்துகொண்டார். பயிற்சி அமர்வுகளில் வன்முறை வகைகள், ஆபத்து காரணிகள், உயிர் பிழைத்தவர்களுக்கான ஆதரவு, சட்ட அம்சங்கள் மற்றும் பரிந்துரை அமைப்புகள் உட்பட பல்வேறு தலைப்புகளை உள்ளடக்கிய விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன. மேலும் அமர்வுகளில் விவாதங்கள், வழக்கு ஆய்வுகள் கற்றல் மற்றும் திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதற்கான பங்கு நாடகங்கள் என்பனவும் இடம்பெற்றன.





பொசன் மிகுந்து மகா பெரஹர நிகழ்வு அக்கரைப்பற்று ஸ்ரீவிஜயாராம மகாவிகாரையின் விகாராதிபதி தேவகொட சோரத்த தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினரின் பங்களிப்புடன் ஞாயிற்றுக்கிழமை(04) இடம்பெற்றது. அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.டக்ளஸின் ஆலோசனைக்கேற்ப ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரனின் ஒருங்கிணைப்பில் மூவின மக்களையும் உள்ளடக்கியதாக இடம்பெற்ற பெரஹர நிகழ்வில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்துகொண்டிருந்தனர். (ஆலையடிவேம்பு செய்தியாளர்)

## டெங்குக் கட்டுப்பாடு குறித்து ஆராய்வு



(கல்லடி செய்தியாளர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்குத் தாக்கம் தொடர்பிலான ஆராய்வு கூட்டம் மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை(05) இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு மாவட்டத்தில் கொக்குவில், சின்ன ஊறணி, வெட்டுக்காடு, இருதயபுரம் ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக டெங்குத் தாக்கம் அதிகரித்துச் செல்வதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஜி.சுகுணன் சுட்டிக்காட்டினார்.

இதன்போது மட்டக்களப்பு அரச அதிபர் கலாமதி பத்மராஜா, மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்த், மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார், மேற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.மஹேந்திரகுமார், திணைக்களத் தலைவர்கள், பொலிஸ் உயரதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com





வரலாற்றுப் பிரசித்தி பெற்ற காரைதீவு ஸ்ரீ கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த திருக்குளிர்த்தி உற்சவத்தில் நந்தவன சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து பக்தர்கள் ஊர்வலமாகச் சென்று மடிப்பிச்சை பெற்று சேகரிக்கப்பட்ட நெல்லை பாரம்பரிய மரபு முறையில் பொங்கலுக்கு நெற்குத்தும் நிகழ்வு திங்கட்கிழமை(05) இடம்பெற்றது.
(காரைதீவு செய்தியாளர்)





கல்முனை பிரதேச செயலக சமுர்த்தி சமூக அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் புகைத்தல் மற்றும் போதைப்பொருள் தடுப்பு கருத்தரங்கு அண்மையில்(01) பெரியநீலாவணை முஸ்லிம் பிரிவில் நடைபெற்றது. இதன்போது பிரதம அதிதியாக சிரேஷ்ட தலைமைப்பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம்.சாலிஹ் கலந்து கொண்டார். வளவாளராக சிரேஷ்ட உளவளத்துணையாளரும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தருமான என்.எம்.நௌஷாத், வலய உதவி முகாமையாளர் பி.எம்.இஷாக், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.சைபுதீன், சங்கங்களின் தலைவர்கள், மற்றும் சமுர்த்திப் பயனாளிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
(மருதமுனை செய்தியாளர்)

## போதைப்பொருள் தாக்கம் தொடர்பான கலந்துரையாடல்





(பாறுக் ஷிஹான்)

'போதைப்பொருள் பாவனையிலிருந்து எமது உறவுகளைப் பாதுகாப்போம்' எனும் தொனிப்பொருளிலான கலந்துரையாடல் நாவிதன்வெளி பிரதேசத்தில் ஞாயிற்றுக் கிழமை(04) இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின்போது போதைப் பொருளின் தாக்கங்கள் மற்றும் அவற்றைத் தடுப்பது குறித்தும் பொருளாதாரத்தை எவ்வாறு போதைப்பொருள் சீரழிக்கின்றது, அவற்றை எவ்வாறு தடுக்கலாம் என்பவை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளிலும் அதிதிகளால் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

இதன்போது, கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீருக்கு நாவிதன்வெளி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினரும் அல்-அமானா சமூக சேவை அமைப்பின் தலைவருமான எம்.வி.நவாஸ் தலைமையில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர் ஏ.நபீர் மற்றும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் குழுத் தலைவர் எஸ்.சஹாப்தீன், ரீ.எம்.றிபாஸ் ஆகியோரினால் பொன்னாடை போர்த்தப்பட்டு கௌரவமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கல்முனை தலைமையகப் பொலிஸ் பொறுப்பதிகாரி ரம்சீன் பக்கீர், சிரேஷ்ட சட்டத்தரணியும் கல்முனை காதி நீதவானுமான எவ்.எம்.அமீருல் அன்சார் மௌலானா, சவளக்கடை பொலிஸ் பொறுப்பதிகாரி டீ.எம்.எஸ்.கே.தசநாயக்க, பெரிய நீலாவணை பொலிஸ் பொறுப்பதிகாரி ஐ.எல்.அப்துல் கபூர், சவளக்கடை பொலிஸ் நிலையப் பொதுமக்கள் தொடர்பாடல் அதிகாரியும் உப பொலிஸ் பரிசோதகருமான ஏ.எம்.ஜவ்பர் ஆகியோர் அதிதிகளாக கலந்துகொண்டனர். இதன்போது கலந்து கொண்ட பெண்கள் அமைப்புக்களுக்கு அதிதிகளினால் வாழ்வாதார உதவிகளும் வழங்கிவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





'நாட்டில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்திசெய்து பெறுமதி மிக்க உயிர்களை க்காப்போம்' எனும் தொனிப்பொருளில் இரத்ததான நிகழ்வு வாழைச்சேனை பிறைந்துரைச்சேனை மஸ்ஜிதுல் ஹிழ்ரியா பள்ளிவாசல் நிர்வாகத்தின் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை(04) இடம்பெற்றது. இதன்போது பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் உட்பட சுமார் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு இரத்ததானம் வழங்கினர். (மட்டக்களப்பு செய்தியாளர்)





பொசன் பூரணை தினத்தை முன்னிட்டு இராணுவத்தின் இலங்கை சிங்க றெஜிமென்ட் பதினோராவது படையணியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட தானசாலை நிகழ்வு மட்டக்களப்பு குருக்கள் மடம் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(04) மாலை இடம்பெற்றது. இதன்போது இராணுவத்தின் 231ஆவது படையணியின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் துளிப்ப மெண்டிஸ் தானசாலையை ஆரம்பித்து வைத்தார். மேலும் களுவாஞ்சிக்குடி பிரதேசத்துக்குப் பொறுப்பான உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜகத் ஜயரத்ன, பொலிஸ் பொறுப்பதிகாரி டி.அபேவிக்ரம, மதகுருமார்கள் மற்றும் பிரமுகர்களும் கலந்து கொண்டிருந்தனர். (கல்லடி செய்தியாளர்)

# டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு முன்னெடுப்பு





(கிண்ணியா செய்தியாளர்)

மூதூர் கிழக்கு கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் அதிகரித்துவரும் டெங்குநோய் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கான விசேட டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடு தனியார் வீடுகள், அரச திணைக்களங்கள், பாடசாலைகள், பொது இடங்கள், கடற்கரையோரங்களில் ஞாயிற்றுக்கிழமை(04) முன்னெடுக்கப்பட்டது.

மூதூர் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்ட குறித்த டெங்கு கட்டுப்பாட்டு செயற்பாடானது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஹில்மி முகைதீன் பாவா தலைமையில் இடம்பெற்றதுடன் வீடுவீடாகச் சென்று டெங்கு பரவும் இடங்கள் பரிசீலிக்கப்பட்டு மக்களுக்கு விழிப்பூட்டல் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. மூதூர் பிரதேச சபை முன்னாள் தவிசாளர் அரூஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பிரதேச சபை உத்தியோகத்தர்கள், கிராம சேவக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மூதூர் பொலிஸ் உத்தியோகத்தர்கள், பாதுகாப்புப் பிரிவினர், அபுரார் சமூக அபிவிருத்தி மையத்தின் உறுப்பினர்கள், சனசமூக நிலையப் பிரதிநிதிகள், சமுர்த்திப் பயனாளிகள், பிரதேசவாசிகள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

# கிழக்கு கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை மாகாணத்துக்குள் நியமிக்க நடவடிக்கை

## பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடனான சந்திப்பில் கல்வியமைச்சர் உறுதி

(மாளிகைக்காடு செய்தியாளர்)

கிழக்கு மாகாணத்துக்கு வெளியே நியமனம் செய்யப்பட்ட கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை மாகாணத்திலேயே நியமிக்கத் தேவையான நடவடிக்கைகளை தான் எடுக்கத் தயாராகவுள்ளதாக கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் குழுவுடனான சந்திப்பின்போது தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களுக்கான நியமனம் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே வழங்கப்படவுள்ளதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து ஆசிரியர் நியமனத்தில் உள்ள பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் நோக்கில் கல்வியமைச்சில் திங்கட்கிழமை(05) கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது சுற்றாடல் அமைச்சர் இஸட்.ஏ.நஸீர் அஹமட், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், முன்னாள் இராஜாங்க அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப், பாராளுமன்ற உறுப்பினர் இசாக் ரஹ்மான் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போதே கல்வியமைச்சர் சுசில் பிரேம ஜயந்த இவ்வாறு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்ததாக ஹரீஸ் எம்.பி. தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை கிழக்கிலேயே பணிக்கமர்த்த நியமனம் வழங்கவேண்டும். கிழக்கு மாகாண ஆசிரியர்களுக்கு இடம்பெறவுள்ள அநீதி தொடர்பிலும் ஆசிரியர் வெற்றிடம் தொடர்பிலும் கல்வி மேம்பாட்டு வேலைத்திட்டங்கள் தொடர்பிலும் அழுத்தமான கோரிக்கையை முன்வைத்த எம்.பிக்கள் குழுவினர் துரித கதியில் நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்தனர்.

இவற்றையெல்லாம் கேட்டறிந்த கல்வியமைச்சர், ஏற்கனவே நியமனக் கடிதங்கள் சகல மாகாணங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதால் மாகாண ஆளுநர்களிடம் கடிதங்களை மீளப்பெறல் தொடர்பில் கலந்துரையாடி நாளை (செவ்வாய்க்கிழமை) மாலை முதற்கட்டமாக ஊவா மாகாண ஆளுநரை அழைத்து பேசவுள்ளதாகவும் தெரிவித்தார்.

மேலும் இந்த நியமனத்தில் சிறிய தவறுகள் இடம்பெற்றுள்ளதைத் தான் அறிந்துகொண்டுள்ளதாகவும் கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டுக்கு தனது பூரண ஆதரவை எப்போதும் வழங்கத் தயாராகவுள்ளதாகவும் தெரிவித்த அவர், கிழக்கு மாகாணத்துக்கு வெளியே நியமனம் செய்யப்பட்ட கல்வியியற் கல்லூரி ஆசிரியர்களை மாகாணத்துக்குள்ளேயே நியமிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார் என ஹரீஸ் எம்.பி. தெரிவித்தார்.

# போடியார் புலம்பல்!



மக்களுக்கு தேர்தல் மற்றும் அரசியல் மீது நம்பிக்கையில்லை என ஜனாதிபதி ரணில் வெறுவாக்கிலம் கெட்ட பொய்ய சொல்லி இருக்காரு எலுவா..? அவரப்போல தேர்தலில ஜெயிக்காம பின்கதவால வந்து ஜனாதிபதின்ர கதிரைய புடிக்கிறதத்தான் மக்களுக்கு விருப்பம் எண்டு சொல்லவாறாரு போல அப்ப மக்கள் விரும்பாததாலதான் உள்ளூராட்சிசப தேர்தல நடத்தாம வச்சிருக்கு எண்டு வாற கிழம விசேட உரையாற்றினாலும் ஆச்சரியம் இல்ல எலுவா?

# கடவுச்சீட்டு அலுவலகம் அமைக்கக் கோரிக்கை

கிழக்கு மாகாணத்தில் ஒருநாள் சேவை மூலம் கடவுச்சீட்டுப் பெறுவோரின் நன்மை கருதி, தனியான பிராந்திய அலுவலகமொன்றை ஏற்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

விலைவாசி, போக்குவரத்து தடங்கல்கள், பொருளாதாரக் கஷ்டங்கள் உள்ளிட்ட பல்வேறு அசௌகரிய சூழ்நிலை காரணமாக கிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பு போன்ற தூர இடங்களிலுள்ள குடிவரவு - குடியகல்வுத் திணைக்களத்துக்குச் சென்று தமது அவசர கடவுச் சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

தற்போது இலங்கையிலிருந்து வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காகச் செல்வோரின் தொகை அதிகரித்துள்ளதுடன் ஒரேநாளில் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்காக நாட்டின் நாலாபுறங்களிலிருந்தும் பெருந்தொகையானவர்கள் கொழும்புக்குச் சென்று வருகின்றனர். இதனால் நேர மற்றும் பண விரயங்கள் ஏற்படுவதுடன் பல்வேறு கஷ்டங்களுக்கும் முகங்கொடுக்க வேண்டியுள்ளது.

எனவே, கொழும்பு, கண்டி, குருநாகல், வவுனியா போன்ற இடங்களில் உள்ளதுபோன்று கிழக்கு மாகாணத்துக்கென தனியான பிராந்திய அலுவலகமொன்றைத் தற்காலிகமாகவாவது ஆரம்பித்து இங்குள்ள மக்கள் எதிர்கொள்ளும் அவலங்களைத் தீர்ப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனப் பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
easthamilan@gmail.com

# ஏறாவூர்ப்பற்றில் மண் அகழ்வு நிறுத்தப்படும்

## இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்







(மண்முனை செய்தியாளர்)

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் பிரிவில் மண் அகழ்வுக்காக இதுவரை ஆயிரத்து 300 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. ஆயினும், சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் சுமார் ஆயிரத்து 270 மண் அனுமதிப் பத்திரங்களை நீக்கி தற்போது 30 அனுமதிப் பத்திரங்கள் மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் இவையும் நீக்கப்படுமென வர்த்தக - வாணிப இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

செங்கலடி குமாரவேலியார் கிராமத்திலுள்ள தாமரைக் குளத்தருகே திங்கட்கிழமை(05) இடம்பெற்ற உலக சுற்றுச்சூழல் தினத்தை அனுஷ்டிக்கும் விழிப்புணர்வு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் அனுசரணையில் ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை மற்றும் ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகம் ஆகியவற்றினால் ஒழுங்குசெய்யப்பட்ட இந்நிகழ்வில், கிராம பொதுமக்களால் குளத்தருகே கொட்டப்பட்ட பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் கழிவுகள் அகற்றப்பட்டதோடு மர நடுகையும் இடம்பெற்றது.

சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய மாணவர்களால் விழிப்புணர்வு நாடகமும் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்வில் மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலர் கே. பவாகரன், ஏறாவூர்ப்பற்று பிரதேச சபைச் செயலாளர் வி.பற்குணம், இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார், பிரதேச செயலக சுற்றுச்சூழல் அலுவலர் எம்.ஐ.ஐயூப், ஏறாவூர் தமிழ் மகா வித்தியாலய அதிபர் சுதாகரி மணிவண்ணன், அபிவிருத்தி உத்தியோகத்தர் ரூபா சுகுமாரன் உட்பட பல அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலகப் பிரிவிலே ஆயிரத்து 300 என்ற எண்ணிக்கையிலிருந்து தற்போது 30ஆகக் குறைக்கப்பட்டிருக்கும் அனுமதிப்பத்திரங்களைக் கூட அடுத்துவரும் இரண்டு மூன்று மாதங்களுக்குள் நிறுத்தி மண் அனுமதிப் பத்திரங்களை வழங்குவதா இல்லையா என்று தீர்மானிப்பதற்கு சிந்தித்துக் கொண்டிருக்கின்றோம்.

அதேபோன்று, ஏனைய கனியவள அகழ்வுகளையும் இப்பொழுது நிறுத்தி வருகின்றோம். ஏனென்றால், இதற்கு அனுமதி வழங்கும் பொழுது எங்களுடைய பெயரும் சேர்த்து பயன்படுத்தப்படுகின்றது. நான் அனுமதி வழங்குவதில்லை. சில திணைக்களங்கள் வழங்கும் பொழுது பிழையான நடவடிக்கைகளால் எங்களுடைய பெயர்களும் களங்கப்படுத்தப்படுகின்றன.

இதற்கப்பால் சுற்றுச்சூழலைப் பாதுகாக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு எமக்கிருக்கின்றது. சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் அகம் நிறுவனம் அரும்பாடுபட்டு வருகின்றது. அதனை நான் வரவேற்கின்றேன். சுற்றுச்சூழலை சேதப்படுத்துவதிலும் மாசுபடுத்துவதிலும் பொலித்தீன் மிக ஆபத்தானது. 20 பில்லியன் பொலித்தீன் இலங்கையில் பாவனையில் உள்ளது. இது உக்கிப்போவதற்கு 100 வருடங்களுக்கு மேல் ஆகலாம் என்று நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். ஆகையால் இந்தச் சுற்றுச்சூழல் பேரழிவிலிருந்து நாம் இந்தப் பூமியைப் பாதுகாக்க வேண்டும் - என்றார்.

# இயற்கையைப் பாதுகாக்கும் விழிப்புணர்வு நிகழ்வு

(மட்டக்களப்பு செய்தியாளர்)

இயற்கையைப் பேணிப்பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு இளைஞர் - யுவதிகளிடையே மனப்பாங்கு மாற்றத்தை ஏற்படுத்தும் பரீட்சார்த்த தொடர் விழிப்புணர்வுச் செயற்பாடுகள் வெற்றியளித்திருப்பதாக அக்ஷன் யுனிற்றி லங்கா நிறுவனத்தின் அலுவலர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

சைல்ட் பண்ட் நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் இந்தத் திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தின் வவுணதீவுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கிராமங்களில் அமுலாக்கம் செய்யப்படுவதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

சர்வதேச சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை(04) இடம்பெற்ற 'பசுமையான சூழலை உருவாக்குவோம் பொலித்தீன் - பிளாஸ்ரிக் பாவனையைத் தவிர்ப்போம்' எனும் தொனிப்பொருளில் இளைஞர் - யுவதிகள் தாங்களாகவே தங்களது பெற்றோர் சகிதம் முன்வந்து தமது வீட்டையும் வீட்டுச் சூழலையும் துப்புரவு செய்ததோடு பயன்தரும் மரங்களை நாட்டுவதிலும் மிக அக்கறையுடன் ஈடுபட்டனர்.

சமூகப் பங்குபற்றுதல் ஊடாக நிலைமாற்றமும் வாய்ப்புகளும் எனும் திட்டம் வவுணதீவு பிரதேச செயலகப் பிரிவில்



பெற்றோரையும் பிள்ளைகளையும் உள்ளடக்கிய விதத்தில் பரீட்சார்த்த திட்டம் தொடக்கிவைக்கப்பட்டது.

இதில் சொறுவாமுனை, விளாவெட்டுவான், பருத்திச்சேனை, பாவற்கொடிச்சேனை, ஆயித்தியமலை போன்ற பிரதேசங்களிலிருந்து 25 இளைஞர் - யுவதிகள் தெரிவுசெய்யப்பட்டு இத்திட்டத்தில் பங்குபற்றுகின்றார்கள். இவர்களிடையே தாங்களாகவே இயற்கை வளத்தைப் பேணிப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் கிராமங்களிலுள்ள சமூகத் தலைவர்களுக்கும் தங்களது வீட்டையும் வீட்டுச் சூழலையும் இயற்கை நேய செயற்பாடுகளின் மூலம் பராமரிப்பதற்கு தொடர் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



உலக சுற்றாடல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு மாபெரும் சிரமதானப் பணி மட்டக்களப்பு பாலமீன்மடு கிராமசேவகர் பிரிவில் திங்கட்கிழமை (05) முன்னெடுக்கப்பட்டது. மட்டக்களப்பு லையிட் ஹவுஸ் சூழல் பாதுகாப்பு விழிப்புக்குழுத் தலைவர் வி.கே.முத்துலிங்கம், கொக்குவில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.கே.யூ.பி.விமலரத்தின ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், பாலமீன்மடு சமூக பாதுகாப்பு பொலிஸ் குழு உறுப்பினர்கள், லையிட் ஹவுஸ் சூழல் பாதுகாப்பு விழிப்புக்குழு உறுப்பினர்கள், பாலமீன்மடு கிராம பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (கல்லடி செய்தியாளர்)



அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் ஒன்றிய வருடாந்த பொதுக்கூட்டம் ஆயுட்காலத் தலைவர் மீரா இஸ்ஸதீன் தலைமையில் ஒலுவில் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் அருகாமையிலுள்ள அஸீஸ் தோட்டத்தில் இடம்பெற்றது. இதன்போது சிரேஷ்ட ஊடகவியலாளர் ஏ.எல்.எம்.சலீம், முன்னாள் செயலாளர் முகம்மட் ஹனிபா உட்பட சங்க ஊடகவியலாளர்கள் பலரும் கலந்துகொண்டனர். புதிய தலைவராக மீரா எஸ்.இஸ்ஸதீனும் செயலாளராக எம்.எம்.முகம்மட் சமட், பொருளாளராக இஸட்.ஏ.றகுமானும் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். (நற்பிட்டிமுனை செய்தியாளர்)

# தெருவிளக்கு பொருத்தும் நடவடிக்கை ஆரம்பம்



(நாவிதன்வெளி செய்தியாளர்)



மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்ட மருதமுனை சுனாமி வீட்டுத்திட்டத்தில் உள்ள உள்ளக தெருக்களுக்கான மின் விளக்குகளை பொருத்தும் வேலைத்திட்டம் திங்கட்கிழமை(05) இடம்பெற்றது.

கல்முனை மாநகர சபையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி, பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, மாநகர பிரதி ஆணையாளர் ஏ.எஸ்.எம்.அஸீம், பொறியியலாளர் ஏ.ஜ.ஜெளஸி, தொழில்நுட்ப உத்தியோகத்தர் எம்.அமீர் உட்படப் பலரும் கலந்துகொண்டனர்.

இவ் வீட்டுத்திட்டத்தில் ஏற்கனவே தனித்தனி வீடுகளுக்கான மின்சாரம் வழங்கப்பட்ட நிலையில், தெருக்களில் உள்ள மின் விளக்குகள் இதுவரை காலமும் இல்லாமையினால் மக்கள் மிகுந்த சிரமங்களை எதிர்நோக்கியிருந்தனர்.

இந்நிலையில், தெருக்களுக்கான மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

# கல்முனை மாநகர சபையில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம்

(சாய்ந்தமருது செய்தியாளர்)



நாட்டில் டெங்கு நோய்த் தாக்கம் தீவிரமடைந்து வரும் நிலையில், கிழக்கு மாகாண ஆளுநரின் அறிவுறுத்தலுக்கமைய கல்முனை மாநகர சபையினால் டெங்கு ஒழிப்பு வாரம் பிரகடனம் செய்யப்பட்டு கொத்தணி சுத்திகரிப்பு வேலைத் திட்டம் திங்கட்கிழமை (05) முன்னெடுக்கப்பட்டது.

மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் கல்முனை கடற்கரைப் பள்ளி வளாகத்திலிருந்து இவ்வேலைத் திட்டம் ஆரம்பமானது.

இதன் பிரகாரம் கல்முனை மாநகர சபையின் அனைத்து திண்மக் கழிவகற்றல் வாகனங்களும் ஆளணியினரும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு வலயத்தில் பிரதேச ரீதியாக மொத்தமாக களமிறக்கப்பட்டு குப்பைகள் யாவும் சேகரிக்கப்பட்டு அகற்றப்படும் என்று நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மாநகர ஆணையாளர் உறுதிபடத் தெரிவித்தார்.

மேலும் கல்முனை, சாய்ந்தமருது, பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை, நற்பிட்டிமுனை போன்ற பகுதிகளில் சுத்திகரிப்புப் பணிகள் முன்னெடுக்கப்படும். இதனை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு பொதுமக்கள் அக்கறை - கரிசனைகொண்டு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தமது வீடு, வளவுகளைத் துப்புரவு செய்து, உக்கும் கழிவுகளை வேறாகவும் உக்காத கழிவுகளை வேறாகவும் தரம் பிரித்து மாநகர சபையின் வாகனங்களில் ஒப்படைக்குமாறும் குறிப்பாக, டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்கு ஏதுவாக அமைகின்ற கொள்கலன்களையும் கழிவுப் பொருட்களையும் தவறாது சேகரித்து ஒப்படைக்க வேண்டும். இவ்வாறான அறிவுறுத்தல்கள் வீதிகள் தோறும் செல்கின்ற மாநகர சபையின் வாகன ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்யப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் அதனை முழுமையாகக் கருத்திற்கொண்டு - பின்பற்றி நடக்க வேண்டுமெனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதன்போது சுகாதாரப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் யூ.எம்.இஸ்ஹாக், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களான ஏ.எல்.எம்.பாறுக், எம்.ஜுனைதீன், மாநகர சபை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ஏ.அஹத், திண்மக்கழிவு முகாமைத்துவ மேற்பார்வையாளர் எம்.அத்ஹம் மற்றும் வலய மேற்பார்வையாளர்களும் பங்கேற்று, சுத்திகரிப்புப் பணிகளை நெறிப்படுத்தியிருந்தனர்.

உலக செய்திகள்

## ஒடிசாவில் தடம்புரண்டது மற்றுமொரு சரக்கு ரயில்

ஒடிசா மாநிலம் பாலசோர் அருகே ரயில் விபத்து நடைபெற்ற இடத்தில் இரு வழித்தடத்திலும் தண்டவாளங்கள் சீரமைக்கப்பட்டதையடுத்து 51 மணி நேரம் கழித்து நேற்று குறைந்த வேகத்திலான பயணிகள் ரயில் சேவை மீண்டும் தொடங்கியது.

**ஒடிசாவில் மீண்டுமொரு ரயில் விபத்து**

இந்நிலையில், கோரமண்டல் விரைவு ரயில் விபத்துக்குள்ளான ஒடிசா மாநிலத்தின் மற்றொரு பகுதியில், நேற்று (05) மீண்டும் சரக்கு ரயிலொன்று தடம்புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது. எனினும் இவ்விபத்தால் உயிர்ச் சேதங்கள் எதுவும் நிகழவில்லை.

ஒடிசா மாநிலத்தின் மேற்குப்பகுதியிலுள்ள பர்காஹ் மாவட்டத்தில் தனியார் சிமெண்ட ஆலைக்கு சுண்ணாம்புக் கல் ஏற்றிச்சென்ற சரக்கு ரயில் நேற்று (05) தடம்புரண்டு விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் உயிர் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதுகுறித்து விளக்கமளித்துள்ள கிழக்கு கடற்கரை ரயில்வே, ''பர்காஹ் மாவட்டத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான இடத்தில் சரக்கு ரயில் தடம்புரண்டுள்ளது. இந்த வழித்தடத்தின் பராமரிப்பு அனைத்தும் அந்த தனியார் நிறுவனத்தால் பராமரிக்கப்படுகிறது. இதற்கும் கிழக்கு கடற்கரை ரயில்வேக்கு எந்த ஒரு தொடர்பும் இல்லை'' என்று தெரிவித்துள்ளது.

முன்னதாக ஒடிசாவில் கடந்த 2ஆம் திகதி தண்டவாளத்தில் நின்றிருந்த சரக்கு ரயில் மீது ஷாலிமார் – சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் மோதியது. அப்போது, எதிர்த்திசையில் வந்த பெங்களூரு – ஹவுரா சூப்பர்ஃபாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயிலும் விபத்தில் சிக்கியது. இந்த பயங்கர விபத்தில் 288 பேர் உயிரிழந்ததாக தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், மீட்கப்பட்ட சில சடலங்கள் இருமுறை கணக்கிடப்பட்டதால், எண்ணிக்கையில் தவறு நடந்துள்ளது. ரயில் விபத்தில் 275 பேர் உயிரிழந்துள்ளனர் என்று ஒடிசா தலைமைச் செயலர் பிரதீப் ஜெனா நேற்றுமுன்தினம் தெரிவித்தார்.

காயமடைந்த ஆயிரத்து 175 பேரில் 793 பேர் சிகிச்சைக்குப் பின்னர் வீடு திரும்பியுள்ளனர். சிகிச்சை பெற்று வருவோரில் 100 பேரின் நிலைமை தொடர்ந்து கவலைக்கிடமாக இருப்பதால் உயிரிழப்புகளின் எண்ணிக்கை மேலும் உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது.

ஒடிசா ரயில் விபத்து மீட்புப் பணியில் தேசிய பேரிடர் மீட்புப் படையினர், ஒடிசா மாநில மீட்புக் குழுவினர், தீயணைப்பு துறையினர் என சுமார் ஆயிரத்து 200 பேர் ஈடுபட்டனர். இதன் காரணமாக மிகப்பெரிய விபத்து நடைபெற்று 24 மணி நேரத்துக்குள் பயணிகளை மீட்கும் நடவடிக்கைகள் முழுவதும் முடிக்கப்பட்டன. இதனையடுத்து ரயில் பெட்டிகள் தண்டவாளத்திலிருந்து அகற்றப்பட்டு, ரயில் பாதைகள் சீரமைக்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வந்தநிலையில் நேற்று (05) ரயில் பயணம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## நூற்றுக்கணக்கானோரை காவுகொண்ட ரயில் விபத்து: காரணம் குறித்து அறிய உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவு



நூற்றுக்கணக்கானோரை பலி வாங்கிய ஒடிசா ரயில் விபத்துக்கான காரணம் குறித்து அறிய உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

இந்நிலையில், விபத்து நேரிட்ட இடத்தில் இரண்டாம் நாளாக ஆய்வு மேற்கொண்ட ரயில்வே அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ், ''எலக்ட்ரோனிக் இன்டர்லொக்கிங் எனப்படும் சிக்னலுக்கான மின்னணு அமைப்பில் மாற்றம் ஏற்பட்டதே ரயில் விபத்துக்குக் காரணம் எனத் தெரிவித்தார்.

ரயில் பாதையில் மாற்று வழித்தடத்துக்காக ஒரு தண்டவாளத்தை மற்றொரு தண்டவாளத்துடன் இணைப்பதற்கான பணியை செய்ய மின்னணு இன்டர்லொக் பயன்படுத்தப்படுகிறது. முன்பு மனித ஆற்றல் மூலம் செய்யப்பட்டு வந்த இப்பணி, தற்போது தானியங்கி முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நவீன தொழில்நுட்பத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாகவே விபத்து நடந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நூற்றுக்கணக்கான பயணிகளின் கனவுகளை, காவுவாங்கிய இந்த கோர விபத்துக்கு பாஹநகா பஜார் ரயில்வே கட்டுப்பாட்டு அறையில் நிகழ்ந்த குளறுபடியே காரணம் என்பதற்கு முக்கிய ஆதாரமான செர்க்கியூட் வீடியோ வெளியாகியுள்ளது.

இந்த விபத்துக்கு நாசவேலை காரணமல்ல என்று தெரிவித்துள்ள ரயில்வே அதிகாரிகள், அங்குள்ள ரயில்வே கட்டுப்பாட்டு அறையிலிருந்து சிக்னல்களையும் லேன்களையும் கட்டுப்படுத்தும் அதிகாரியின் கவனக்குறைவு இந்த விபத்துக்கு காரணமாக அமைந்திருக்கலாம் என்றும் விபத்து நடந்த நேரத்தில் அந்த லேன்களிலுள்ள சிக்னல்களில் ஏற்படும் மாற்றங்களை அவர்கள் கணினி பதிவுகள் மூலம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

''ஒரே தண்டவாளத்தில் இரு ரயில்கள் வந்தால் சென்சார் மூலம் உணர்ந்து தானாக எச்சரிக்கும் 'கவச்' தொழில்நுட்பம் இந்த தடத்தில் பொருத்தப்பட்டிருந்தால் இப்படி ஒரு கோர விபத்து நிகழ்ந்திருக்காது'' என்று விபத்து நடந்த இடத்தை பார்வையிட்ட மேற்குவங்க முதலமைச்சர் மம்தாபேனர்ஜி தெரிவித்தார்.

இந்த விபத்து குறித்து ரயில்வே துறையின் பல்வேறு பிரிவு அதிகாரிகள் தனித்தனியாக தங்கள் ஊழியர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

### சவக்கிடங்கில் மகனை உயிரோடு கண்டுபிடித்த தந்தை

ஒடிசா ரயில் விபத்தில் சிக்கிய கோரமண்டல் விரைவு ரயில் விபத்துக்குள்ளானதான செய்தியைப் பார்த்ததும் கொல்கத்தாவிலிருந்து புறப்பட்டு, விபத்துப் பகுதிக்குச் சென்று, சவக்கிடங்கில் உயிரோடிருந்த தனது மகனை மீட்டு வைத்தியசாலையில் சேர்த்துள்ளார் ஹெலராம் மாலிக் என்ற தந்தை.

ஹெலராம் மாலிக், மகன் பிஸ்வாஜித் மாலிக்கை (வயது24) கடந்த வெள்ளிக்கிழமை கோரமண்டல் விரைவு ரயிலில் ஏற்றிவிட்டு வீடு திரும்பியுள்ளார். வீடுவந்து சேர்கையில் ரயில் விபத்து குறித்து செய்தி அறிகிறார். அப்போதுதான் அந்த ரயிலில் தனது மகனை ஏற்றிவிட்டு வந்த ஹெலராம் துடிதுடித்துப் போனார். மகனை கைப்பேசியில் அழைத்தபோது, அவர் உயிரோடு இருக்கிறார், ஆனால், கடுமையான வலியால் துடித்துக்கொண்டிருக்கிறார் என்பது மட்டும் தெரிந்துள்ளது.

விபத்து நடந்தது தானிருக்கும் பகுதியிலிருந்து 230 கிலோ மீற்றர் தொலைவிலிருந்ததால், ஒரு அம்பியூலன்ஸை எடுத்துக் கொண்டு உறவினருடன் சம்பவ இடத்துக்குச் செல்கிறார்.

எங்கு தேடியும் தனது மகன் கிடைக்கவில்லை. வைத்தியசாலைகளில் சென்று தேடுகிறார். மகன் இல்லை. கடைசியாக அவருக்குக் கிடைத்த பதில், அருகில் இருக்கும் பாடசாலையொன்றில் உயிரிழந்தவர்களின் உடல்கள் வைக்கப்பட்டிருக்கும் இடத்துக்கான முகவரி.

அங்கே செல்ல மனமே இல்லாமல், தனது மகன் உயிரோடுதான் இருப்பார் என்ற நம்பிக்கையோடு, வேறுவழியே இல்லாமல் செல்கிறார். உயிரிழந்தவர்களின் உடல்களைக் காண அனுமதி மறுக்கப்பட்ட நிலையில், அங்கிருந்தவர்களுடன் அவர் வாதாடிக்கொண்டிருந்தபோது உயிரிழந்தவர்களின் உடல்களுக்கிடையே ஒருவரின் கை அசைவதைக் கண்டு, அங்கு சென்றுப் பார்த்தால், ஆம்.. அது அவரது மகன்தான்.

உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த பிஸ்வாஜித்தை உடனடியாக அம்பியூலன்ஸில் ஏற்றிக் கொண்டு, முதலுதவி சிகிச்சை செய்து கொண்டு கொல்கத்தாவுக்கே அழைத்துச் சென்று வைத்தியசாலையில் சேர்த்து முதற் கட்ட அறுவை சிகிச்சையும் முடிந்துள்ளது. மீண்டும் ஓர் அறுவை சிகிச்சை செய்ய வைத்தியர்கள் திட்டமிட்டுள்ளதாக தகவல். கால்களில் அவருக்கு படுகாயம் ஏற்பட்டிருக்கிறதே தவிர, உயிருக்கு ஆபத்தில்லை என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இப்படி உயிரோடு இருப்பவர்கள் சவக்கிடங்குக்குக் கொண்டு செல்லப்பட்டது குறித்து அதிகாரிகள் தெரிவிக்கையில், ''மீட்புப் பணியில் ஈடுபட்டவர்கள் பெரும்பாலானோர் வைத்தியத்துறையை சாராதவர்கள். அதனால்தான் படுகாயமடைந்து சுயநினைவிழந்தவர்கள் உயிரோடு இருக்கிறார்களா என்பதை உறுதி செய்துகொள்ளாமல், சவக்கிடங்கில் போடப்பட்டிருக்கிறார்'' என்று தெரிவித்துள்ளனர்.

### மரண ஓலத்துடன் பேசிய காதல் கடிதங்கள்!

ஒடிசா ரயில் விபத்து இடம்பெற்ற இடம் சோக சுவடுகளை என்றும் சுமந்து கொண்டிருக்கும்.

அந்த இடத்தில் சிதறிக் கிடந்த பொருட்கள் ஒவ்வொன்றும் பல இதயங்களின் வலியையும் ஏக்கத்தையும் பிரதிபலிப்பதாக இருக்கின்றது.

விபத்து நடந்து மூன்றாவது நாளான நேற்றுமுன்தினம்(04) மீட்புக் குழுவினர் துரிதமாக மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, சிதைந்த தண்டவாளத்தின் அடியில் பயணியொருவரின் கைப்பையொன்று கிடந்துள்ளது.

இந்த பைக்குள் ஒரு 'நோட்' புக்கும் இருந்துள்ளது. அதை பிரித்து பார்த்தபோது மீட்புக் குழுவினர் கண்களில் வேதனை கலந்த கண்ணீர் கசிந்தது.

ஏனெனில், அந்த 'நோட்' புத்தகத்தில் இடம்பெற்றிருந்தது அனைத்தும் காதல் கவிதைகள்.




சிவப்பு, நீலம், பச்சை என்று பல வண்ணங்களை கவிதையாக வடித்திருந்தார். வங்காள மொழியில் எழுதப்பட்டிருந்த கவிதைகள் ஒவ்வொன்றும் காதலையும் காதலின் ஏக்கத்தையும் வெளிப்படுத்தியிருந்துள்ளது.

***''சிறிய மேகங்கள் மழையை உருவாக்குகின்றன. சிறிய கதைகள் அன்பை உருவாக்குகின்றன...''*** என்று அந்த கடிதங்கள் நீள்கிறது. எழுதியவர் யார், அவர் என்ன ஆனார்? என்பது தெரியவில்லை. அவரது காதலின் அடையாளமான கடிதங்கள் மட்டும் எஞ்சி நிற்கின்றன.

இதேபோன்று குழந்தைகளுக்காக ஆசையாக வாங்கி வைத்திருந்த பொம்மைகள், உடைகள் என்பனவும் சிதறிக் கிடந்தன. கிழிந்தும் சிதைந்தும் கிடந்த அவற்றின் மீது இரத்தக்கறைகள் படிந்து காணப்பட்டன. சிதறிக் கிடந்த பயணிகளின் உடைமைகளை தன்னார்வலர்கள் சேகரித்து ஆங்காங்கே குவித்து வைத்துள்ளனர்.

## இன்று காலிறுதியில் ஆடும் ஜோகோவிச்



பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடரின் காலிறுதி ஆட்டத்துக்கு செர்பியாவின் நட்சத்திர வீரர் நோவக் ஜோகோவிச் தகுதிபெற்றார்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து கொண்ட பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் தொடர் கடந்த 28ஆம் திகதி முதல் பாரீஸ் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆண்களுக்கான 4ஆவது சுற்று ஆட்டத்தில் நட்சத்திர ஆட்டக்காரர் செர்பியாவின் நோவக் ஜோகோவிச் பெருவியன் வீரர் ஜுவான் பாப்லோ வெரிலாஸை எதிர்கொண்டார்.

இந்த ஆட்டத்தில் ஆரம்பம் முதலே தனது அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய ஜோகோவிச், ஜுவான் பாப்லோவை 6-3, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார். இதன் மூலம் இன்று காலிறுதி ஆட்டத்தில் ஜோகோவிச், கரேன் கச்சனோவ்வை எதிர்கொள்கிறார்.

விளையாட்டு செய்திகள்

thamiliansports@gmail.com

## 20ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர்

## தங்கம் வென்ற தருஷி: ஆறாமிடத்தில் இலங்கை



20ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் நேற்று நடைபெற்ற மகளிருக்கான 800 மீற்றர் ஓட்டத்தில் இலங்கையின் தருஷி கருணாரத்ன தங்கப்பதக்கம் வென்றார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் தென் கொரியாவின் யெச்சியோன் நகரில் 20ஆவது ஆசிய இளையோர் மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடர் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று முன்தினம் பெண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கைக்கு வெள்ளி மற்றும் வெண்கலம் என பதக்கங்கள் கிடைத்தன.

நேற்று மாலை வரையான போட்டி முடிவுகளின்படி, பதக்கப் பட்டியலில் இலங்கை ஒரு தங்கம், ஒரு வெள்ளி மற்றும் இரு வெண்கலத்துடன் மொத்தமாக 04 பதக்கங்களை வென்று ஆறாவது இடத்தில் காணப்படுகிறது.

### நிலானிக்குத் தடை



ஊக்கமருந்து குற்றச்சாட்டு காரணமாக இலங்கையின் நெடுந்தூர ஓட்ட வீராங்கனை நிலானி ரத்நாயக்கவுக்கு போட்டித் தடை விதிக்கப்பட்டுள்ளது. இராணுவ மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டியில் ஊக்கமருந்து பயன்படுத்தியதாக எழுந்த முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஆசிய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி உட்பட பல போட்டிகளில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை அவர் இழக்கவுள்ளார். நிலானி ரத்நாயக்க 2022 டோக்கியோ ஒலிம்பிக் போட்டியிலும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 14 ஆண்டுகளின் பின் ரியல் மாட்ரிட்டுக்கு விடைகொடுக்கும் பென்சிமா




பிரான்ஸ் நட்சத்திர வீரர் கரீம் பென்சிமா ரியல் மாட்ரிட் அணியில் இருந்து வெளியேறுகிறார். போர்த்துக்கல் வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ 2018ஆம் ஆண்டில் ரியல் மாட்ரிட் கிளப்பில் இருந்து வெளியேறினார். அதன் பின்னர் கரீம் பென்சிமா அணியின் நம்பிக்கை நட்சத்திரமாக இருந்து வருகிறார்.

இந்த நிலையில் பென்சிமா அணியை விட்டு வெளியேறுவதை ட்வீட் மூலம் ரியல் மாட்ரிட் உறுதிப்படுத்தியுள்ளது. இதன்மூலம் 14 ஆண்டுகளுக்கு பின் பென்சிமா ரியல் மாட்ரிட்டில் வெளியேறுகிறார். நடப்பு சீசன் அவருக்கு ரியல் மாட்ரிட்டில் கடைசி லீக் ஆகும். அவர் ரியல் மாட்ரிட் அணிக்காக 353 கோல்களை அடித்துள்ளார்.

பென்சிமாவுக்கும் கிளப்புக்கும் இடையே பரஸ்பர உடன்படிக்கை ஏற்பட்டுள்ளதாகவும் அவரது எதிர்காலம் சிறப்பாக அமைய வாழ்த்துவதாகவும் மாட்ரிட் தெரிவித்துள்ளது. இதற்கிடையில் 35 வயதாகும் பென்சிமா, சவூதி புரோ லீக்கிற்கு செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## உதைபந்து போட்டியை பார்க்கவந்த ரசிகர் பலி

ரிவர் பிளேட் - டெப்சேனா ஒய் ஜஸ்டிகா அணிகளுக்கிடையிலான உதைபந்து போட்டி சனிக்கிழமை அர்ஜென்டினாவின் பியூனஸ் அயர்சில் உள்ள ஸ்டேடியத்தில் நடைபெற்றது. இதன்போது போட்டியைக் காண ஏராளமான ரசிகர்கள் திரண்டிருந்தனர்.

அப்போது மைதானத்தின் கேலரியில் அமர்ந்திருந்த 53 வயது மதிக்கத்தக்க ரசிகர் ஒருவர், கீழே விழுந்துவிட்டார். இதன்போது அவரது தலைமையில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. உடனடியாக அங்கு மருத்துவக் குழுவினர் விரைந்து சிகிச்சையளித்தனர். இருந்தபோதிலும் தலையில் ஏற்பட்ட காயம் காரணமாக அந்த ரசிகர் சிறிது நேரத்தில் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் காரணமாக, முதலில் மருத்துவ எமர்ஜென்சி எனக் கூறி போட்டி 14 நிமிடங்களுக்கு நிறுத்தப்பட்டது. பின்னர் போட்டி ஆரம்பமானது. அதன்பின்னர் ரசிகர் இறந்தது தொடர்பாக நடுவர் அறிவித்ததும் போட்டி மேலும் 27 நிமிடங்களுக்கு நிறுத்தப்பட்டது. அதேவேளை, ஒருநாள் முழுவதும் துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டதுடன், மைதானம் 24 மணி நேரம் மூடப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

## நீச்சல் பயிற்சியை முடித்த மாணவர்கள் 87பேருக்கு சான்றிதழ்கள் வழங்கி வைப்பு





(மு.தமிழ்ச்செல்வன்)

கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் ஆரம்ப நீச்சல் பயிற்சினை நிறைவு செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சியை சேர்ந்த எட்டு பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்களுக்கு ஆறு நாள் நீச்சல் பயிற்சிகள் வழங்கப்பட்டன. இதில் முழுமையாக பயிற்சியை நிறைவு செய்த மாணவர்களுக்கு நேற்று முன்தினம் (04) சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

கிளிநொச்சி றோட்ரிக்கோ விளையாட்டு மைதானத்தில் அமைக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தை கிளிநொச்சி நீர் விளையாட்டுக் கழகம் பொறுப்பேற்ற பின்னர் இதுவரை ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு ஆரம்ப நீச்சல் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் அடுத்த மாதம் ஒலிம்பிக் போட்டி உட்பட சர்வதேச நீச்சல் போட்டிகளில் பங்குபற்றும் வீரர்களுக்கு நீச்சல் பயிற்சியை வழங்கும் பயிற்றுவிப்பாளர் ஒருவர் வருகை தந்து நீச்சல் பயிற்சிகளை வழங்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நுவரெலியா விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுச் சபைக் கூட்டத்தை முன்னிட்டு ஸ்னூக்கர், பிலியட், மேசைபந்து ஆகிய போட்டிகள் நடத்தப்பட்டன. 36 விளையாட்டு வீரர்கள் போட்டியிட்ட ஸ்னூக்கர் போட்டியில் சங்கப்பிள்ளை ஆறுமுகம் முதலாம் இடத்தையும் எம்.டி.பூசோ இரண்டாம் இடத்தையும் பெற்றனர். (செ.திவாகரன்)**







Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7